REGD. M. 4842,

# திராவிடநாடு

மலர் 6 | 31-8-47 | இதழ் 14

# பழங்காலம்!

## அந்த நாட்களில்!

என்று கூறி, ஆயாசமடைந்து, இந்த நாள் செய்யப்படும் எந்த வகையான மாறுதலும், தவறு என்று வாதிடும் அன்பர்கட்கு, அந்த நாட்களில், பழங்காலத்தில், இருந்த காட்சி ஒன்றினைக் காட்டியிருக்கிறோம். திருப்தியா? இந்த நிலை, மீண்டும் வேண்டுமா?



## "திராவிடன்"

இந்தி எதிர்ப்பு இயக்கம், ஆச்சாரியார் மந்திரிசபைக்கு, ஒரு புயலாயிற்று. அந்தப் பெரும் புயலின் போது, காங்கிரசாரிடம் இருந்து நமக்குக் கிடைத்த தொல்லே அமோகம். ஆனால் பரிசு கிடைக்காமல் போய்விட்டதா? நல்லபரிசும் கிடைத்தது. சென்னைநகரிலே, தமிழருக்கு அங்ஙனம் கிடைத்த பரிசு, நண்பர் N. V. நடராஜன்.

தொழிலாளரிடம் பணிபுரிந்து வந்தவர், காங்கிரசில் பணிபுரிந்தவர்— இன்று திராவிட இபக்கத்துக்குத் தளராது பணிபுரிபவர். அவர் திராவிடருக்குத் திராவிடன் எனும் வார இதழை அளித்திருக்கிறார், ஆகஸ்ட்டு 17-ந் தேதி. தமிழகத்தின் பல பகுதிகளையும்நேரில்கண்டு, ஆங்காங்குள்ள குறைபாடுகளை நன்கு உணர்ந்த நண்பர் நடராஜன், திராவிட இயக்கம் பாட்டாளிகளுக்கு எவ்வகையிலே பணிபுரிய வேண்டும் என்று திட்டம் தீட்டி, அதனைத் தமது கிழமை இதழ் மூலம் நாட்டு மக்களுக்கு அளிக்கும் நன்னோக்கத்துடன், இதழை வெளியிடுகிறார். இதழின் நிர்வாகக் காரியங்களைச் செவ்வையாக நடத்தும் பொறுப்பை, சென்னை மாவட்டத் திராவிடர் கழகத் தலைவர் அரசு ஏற்றுக் கொண்டிருப்பதால், இதழ், பலவிதமுன்னேற்றங்களுடன் இனித் திகழும் என்று நம்புகிறோம். இன்று சென்னை நகரிலே, திராவிட கழகம் நல்ல வேலை செய்கிறது என்றால், அதற்குக் காரணம், நண்பர் நடராஜன, தோழர் அரசு ஆகியோரின் பணி என்றுகூறிவிடலாம். அவ்விருவரின் கூட்டு முயற்சியான, திராவிடன் திராவிட நாடு திராவிடருக் காக்கும் பணியினை, வெற்றிகரமாக நடத்திச் செல்லும் என்பதில் நமக்கு ஐயமில்லை. திராவிட நாடு விடுதலை பெறுவதற்காகப் பணி புரியும் பத்திரிகைக் குழாத்திலே, புகுந்துள்ள, துணைப் பத்திரிகையை நாம் வாழ்த்தி வரவேற்கிறோம். பத்திரிகை, கிரவுன் 4 பக்கங்கள் கொண்டது, விலை ஓரணு.

கிடைக்குமிடம்:—

"திராவிடன் அலுவலகம்"
6. சுங்குராமச் செட்டித் தெரு,
G. T. சென்னை.

## திராவிட நாடு பிரிவினை மாநில மாநாடு

மேற்படி மாநாடு 14-9-47 ஞாயிறன்று கூடலூர் O. T. (Cuddalore Junction) தோழர் A. C. கோவிந்தன் அவர்கள்திடலில்அமைந்திருக்கும் அருச்சுனன் பந்தலில் நடைபெறும்.

தலைவர்:- S. முத்தையா
(முன்னாள் அமைச்சர்)

திறப்பாளர்:- டாக்டர் A. கிருட்ணசாமி
(லிபரேட்டர் ஆசிரியர்)

கொடியேற்றுபவர்:-
P. பாலசுப்ரமணியம்
(சன்டே அப்சர்வர் ஆசிரியர்)

திராவிடநாடு படத்திறப்பாளர்:-
சென்னைமாகண முஸ்லீம் லீக் தலைவர்
M. முகம்மது இஸ்மெயில் M. L. A

பெரியார் E. V. இராமசாமி, T. P. வேதாசலம், N. சங்கரன், K. அன்பழகன் M. A. இரா. நெடுஞ்செழியன் M. A., A. P. ஜெனார்த்தனம் M. A., A. திராவிடமணி B. A., S. குருசாமி B. A., தென்னாற்காடு முஸ்லிம் லீக் தலைவர் ஜனப் ஜக்கிரியா; ஜனப் V. S. முகம்மது இப்ருகிம் M, L. A. இன்னும் பல கருத்துடைய பெருந்தலைவர்களும் கலந்துகொள்வார்கள். எல்லாக் கட்சி திராவிடத் தோழர்களும் ஆந்திர, கோள, கன்னடத் தலைவர்களும் வருகிறார்கள். அனைவரும் வருக.


விற்பனைக்குத் தயார்

"தௌமியன்"

ஆசிரியர்: பாரதி தாசன்.

தனிப்பிரதி 1—4—0

விற்பனையாளர்களுக்கு 20% கழிவு உண்டு.

தனிப்பிரதி வேண்டுவோர் 1-6-0 மணியார்டர் செய்யவும்.

கிடைக்குமிடம்:-

திராவிடன் சயிக்கிள் மார்ட்
நாமக்கல்.


## பெயர் சூட்டல்

இராணிப்பேட்டைத் தோழர் K. C. கண்ணன் அவர்களுக்கும் தோழியர் சாலா அம்மைக்கும் பிறந்த குழந்தைக்கு இளங்கோவன் என்ற பெயர் சூட்டப்பட்டது.

## அறிக்கை

1—9—47 முதல் திராவிடநாடு, விடுதலை வேண்டுவோர் அடியில் கண்ட முகவரியில் பணம் செலுத்தி சந்தாவைப்பதிவு செய்துகொள்ளும்படிக்கும் அப்படி செய்துக்கொள்ளாதவர்களுக்கு ஷை தேதி முதல் பத்திரிகையும் நிறுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்
M. அருகதாஸ்
விடுதலை & திராவிடநாடு ஏஜண்ட்
திண்டிவனம்.

## திராவிடத் திருமணம்

சிதம்பரம் லாலுபேட்டையில் 6—7—47 ஞாயிறு காலை திரு அப்பாவு நாட்டார் மகன் திரு சதாசிவம் எனும் திருமாறனுக்கும், கூடலூர் அக்கரைகோரி திரு பொன்னுசாமி நாட்டார் மகள் திரு அஞ்சலை எனும் மாசிலாமணி அம்மைக்கும், வாழ்க்கை ஒப்பந்தம் உறுதி கூறப்பட்டு நிறைவேறியது.

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

"திராவிட நாடு" ஏஜண்டுத் தோழர்களில் பலர், தங்கள் பாக்கியை ஒழுங்காக அனுப்புவதில் காலதாமதம் செய்வதால் பத்திரிகைக் காகிதம் வாங்குவதில் பண நெருக்கடி ஏற்படுகின்றது. ஆகையால் பாக்கி உள்ள ஏஜண்டுகள் தங்கள் பாக்கியை உடனே அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்வதோடு, பாக்கி அனுப்பாதவர்களுக்கு 1—9—47 முதல் பத்திரிகை அனுப்பப்படமாட்டாதென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணு **திராவிடநாடு** ஆண்டுசந்தா ரூ 7

# "பேய், ஓடிப்போச்சி"

"அண்ணே! பூசாரி பொன்னனை நான் என்னமோன்னு எண்ணிகிட்டுக் கிடந்தேன். இப்பத்தெரியுது அவன் இலேசுப்பட்டவனில்லேங்கற விஷயம்."

"என்னத்தெடாப்பா, கண்டுட்டே இப்ப?"

"என் மவளுக்கு, கொஞ்சநாளா, மயக்கமா இருந்தது பார் அண்ணே! மாமரத்துப் பிசாசு, பிடிச்சிகிட்டு ஆட்டிவைச்சிதேண்ணே........"

"ஆமா! உம்மவ, செல்லாயியைத் தானே...."

"ஆமாண்ணே! பூசாரி போட்ட மந்திரத்திலே, பேய், ஓடிப்போச்சண்ணே. இப்ப என் மவ, சௌக்யமா, சிரிச்சிப்பேசிகிட்டுச் சிங்காரிச்சிபூமுடிச்சிகிட்டுஇருக்கிறு. என்னமோண்ணே! மாயம்மந்தரம் இதெல்லாம் தப்புன்னு, என் மவன், பட்டணத்து ஆசாமிக பேச்சைக்கேட்டுகிட்டு, சொல்லிவந்தான. நானும், அவன் நம்மெப்போல பட்டிக்காட்டிலே இல்லேயே, டிராம் வண்டிஓடற பட்டணத்திலே இருக்கானே, ரொம்பப்படிச்சவங்க பேச்சைக் கேட்டு இதைச் சொல்றன்னு, நம்பிக்கிட்டு இருந்தேன். பைத்யக்காரப் புள்ளெ! இப்பல்லவா தெரியுது, மந்தரம்னு பொய்னு சொல்றதுக்கில்லேங்கிற சூச்சமம். நல்லாயிடுத்து செல்லா. முந்தி, சுருண்டு சுருண்டு படுத்துக்குமா? பேசாது சரியா—முகத்தைக் கழுவாது — ஒருவேலேயும் செய்யாது— சிடுசிடுன்னு பேசிகிட்டு...."

"பேய் பிடிச்சா அப்பிடித்தான்"

"ஆமாம்! அந்தப்பய, பேயாவது பூதமாவது, அதெல்லாம் தப்புன்னு சொன்னன். மாமரத்துப் பிசாசு இலேசுப்பட்டதா?"

"ஆமா! அந்தப்பய, தூக்குப் போட்டுகிட்டவன், உசிரோடே இருக்கச்சயே ரொம்பப்பொல்லாப் பயலாச்சே, பிசாசு ஆனு கேட்கோணுமா சேஷ்டையை. சரி, சுகமாயிடுத்தேல்லோ, போவுது. சொக்கிம்மாவுக்கு அடுத்த வெள்ளிக்கு ஒரு சேவலே அறுத்துப்படையலேப்போட்டுப்போடு. நான் வர்ரேன். அது சரி! உம்மகளுக்குத்தான் இப்ப, பேய்இல்லேயே, இனிக்கண்ணுல விஷயத்தை முடிச்சிட வேணுமோல்லோ?"

"ஆமாண்ணெ! முடிச்சிடத்தான் வேணும். என் மவன், அதுக்காகத் தானே, இங்கேயே தங்கி இருக்கான்."

"இடம் எங்கே பார்த்தே"

"நம்ம வேலந்தான்"

"மறந்து போனேன். போன வருஷமே, அவனைத்தானே உன் மவளுக்கு ஏற்பாடு சேஞ்சிருந்தே"

"ஆமாமாம். பய, கண்ணெ காட்டிப் பல்லேக்காட்டி, என்மவளுக்கு ஆசை ஊட்டிட்டான்."

"பரவாயில்லெ. பய்யன் நல்லவன்."

"ஆமாம்! நம்ம கொல்லேக்கு அடுத்த கொல்லேயை அவன் குத்தவைக்கு எடுக்கறப்பவே எனக்குச் சந்தேகம்—பய்யன் பக்கத்திலே வர்ரதுபயிர்பண்ண இல்லென்னு...."

"குத்தவே பணங்கூட அதிகமால்லா கொடுத்தானும்"

"ஆமாண்ணெ! இந்த வருஷத் தோடே தீந்ததுன்னு வையி. குத்தவைத்தான் எடுத்தானே, மடப்பய மவன், ஒரு கத்திரி, முள்ளங்கி ஏதாச்சும் போட்டா நாலுகாசு வருமா? அதெ உட்டுப் போட்டு, ரோஜா வெச்சிட்டான்."

"சரித்தான். செல்லாயிக்குத்தான் பூன்னு உசிரு."

"இந்தக் காலத்து பசங்க சாமார்த்தியத் தெப்பாரண்ணெ. போவுது, பசங்க சந்தோஷமா இருக்கட்டும். நான் பயந்து போயிருந்தேன், பேய் பிடிச்சுட்டுதே, அது சூதி என்னுவுதோ, ஏதாவதோன்னு"

"ஒனக்கு ஒருகொறையும் வராது. போய்வாப்பா"

* * *

ஓரூர், கிராமத்திலே, உழவன் செங்கோடனுக்கும், ஊர்ப்பெரியவர் கரியானுக்கும், நடந்தது இந்த உரையாடல். செங்கோடன், தன்மகள் செல்லாயிக்கு, பேயால் என்ன நேருமோ என்று பயந்து, பதைத்து, செய்யாத பூஜை இல்லே. கடைசியில் பூஜாரி பொன்னனின் தயவால்தான் அவள் பிழைத்தாள். ஊர்ப்பெரியவர், கரியப்பாவிடம், இந்தச் சந்தோஷச் செய்தியைக் கூறிவிட்டு, செங்கோடன், வேறுயார் அகப்படுவார்கள் பேச என்று புறப்பட்டான்—அன்று காலையிலிருந்து, இந்தச் சேதியைப் பலரிடம் கூறிக் கொண்டிருப்பதே வேலேயாக இருந்தது செங்கோடனுக்கு.

ஓரூர் (அதுவே அந்தக் கிராமத்தின் பெயர்) வாசிகளிலே முக்கால் வாசிப்பேரிடம், கூறியாகிவிட்டது. ஏற்றம் இறைத்துக் கொண்டிருக்கும் எல்லனைத்தேடிக்கொண்டுபோகிறான் செங்கோடன். பேய் பிடித்துக் கொண்ட பெண்ணை, எவன் கலியாணம் செய்து கொள்ளப்போகிறான் என்று பயந்தான், பதைத்தான். உயிருக்கே ஆபத்து நேரிட்டு விடுமோ என்றும் பயம். ஒரே பெண்—ஒரே

பிள்ளை-பிள்ளை, "இரண்டெழுத்து" படித்தவன் அதனாலே பட்டணத்திலே வேலை. அதிலேயும், பத்திரிகாலயத்திலே! பார்சல் கட்டுகிற வேலை தான், என்றாலும், பத்திரிகை ஆபீஸ் வேலை என்றுதான், செங்கோடன், பெருமையாகப் பேசிக்கொள்வான். அதிலே தவறுமில்லை. இரண்டு தலைமுறையாக ஏர் தவிர வேறு தெரியாத குடும்பத்திலே பிறந்த சுப்பு, வெள்ளைச் சொக்காயும், காக்கி நிஜாரும் போட்டுக்கொண்டு, ஆபீசில் வேலைக்குப் போனால், பெருமை இல்லாமலிருக்குமா! லீவ் கிடைத்து வருகிறபோது, சுப்பு, கிராமத்திலே, யாரிடம் பேசும் போதும், தனி மனிதனாகவே தென்பட்டான். விவசாயத்தைப் பற்றியா பேசுவான்! தெரியாதே பேச! உலக விஷயங்களைப்பற்றி-அவசர அவசரமாக அவன் படித்துத் தெரிந்து கொண்ட அளவு-கூறுவான். வாயைப் பிளந்து கொண்டு கேட்பார்கள் கிராமவாசிகள். செங்கோடனுக்குப் பெருமை! தன் மகனிடம் "சேதி" கேட்க, கிராமமே திரண்டு வருவது கண்டு. "சூரியன் இருக்கே, சூரியன்...." என்று ஆரம்பிப்பான் சுப்பு.

"சொல்லுப்பா! சூரிய பகவான் தான் கண் கண்ட தெய்வம், அவருக்கு என்ன? சொல்லு" என்று பக்தியைச் செலுத்தியபடி கேட்பான் குட்டி.

"சூரியன், பகவானுமில்லே, மனுஷனுமில்லே! அது பெரிய நெருப்பு உருண்டைப்பா" என்பான் சுப்பு. குட்டி, பக்கத்திலே இருக்கிறவனைப் பார்த்துக் கண் சிமிட்டுவான்.

"அப்படின்னா, அந்த உருண்டை உருளுதோ, காலேயிலேந்து சாயரட்செ வரையிலே" என்று கேலி பேசுவான் குப்பன். இதை எல்லாம் சமாளித்துக்கொண்டு, அவர்களுக்குப் பல விஷயங்களை விளக்குவான் சுப்பு.

"என்னென்னமோ சொல்றாண்டா நம்ப சுப்பு!" என்று புகழ்வார்கள். அவன் சொல்வது, சிலருக்கு விஷயம் புரியாவிட்டாலும், அது சரியாகத்தான் இருக்கும், எல்லாம் சுப்புக்குத் தெரியும் என்று கூறிவிடுவார்கள். பத்துக் காணி பூமிக்குச் சொந்தக்காரனானால் கூட, சுப்பு அடைய முடியாத மதிப்பு, "ஆபீஸ் வேலை" கொடுத்தது.

அவன் வேலை செய்துவந்த பத்திரிகை 'உலகம்' என்பது விதவிதமான வர்ணப் படங்கள் நிரம்பியது. சிரமப்பட்டு, அந்தப் படங்களை எல்லாம் கத்தரித்து, ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்திலே ஒட்டி, செல்லாயிக்குத் தந்தான். தன் அண்ணன் கொடுத்த அந்தப் புத்தகத்தை அருமையான பொக்கிஷமாக மதித்தாள் செல்லாயி. உண்மையிலேயே, எப்போது சமயம் கிடைத்தாலும், அவளுக்கு அந்தப் படங்களைப் பார்ப்பதும், தன்னை ஒத்த பெண்களுக்குக் காட்டுவதுந்தான் வேலை.

அந்த அரிய பொக்கிஷம் போன்ற புத்தகத்திலே கூட இரண்டோர் ஏடுகளைக் கிழித்துவிட்டாள் செல்லாயி—அவளா செய்தாள் பாவம்! எல்லாம் அந்தப் பேய் செய்த வேலை என்று செங்கோடன், தன் மகனுக்குக் கூறினான். புத்தகம் கிழிந்ததைப் பற்றிக் கவலைப்படவில்லை சுப்பு. தன் தங்கையின் தேக நிலை பற்றித்தான் கவலைப்பட்டான்.

முன்தடவை வந்தபோது செல்லாயி, ஒரு குறையுமின்றித்தான் இருந்தாள். சொல்லப்போனால் ரொம்பச் சந்தோஷமாகவே இருந்தாள்.

"எங்கேம்மாபோயிருந்தே" செங்கோடன் கேட்பான்.

"கொல்லைப் பக்கம்" செல்லாயி சொல்வாள்.

"ஏனம்?"

"சேங்கண்ணு அந்தப் பக்கமா போயிருக்கும்........" குறும்புக்கார குப்பன் சொல்லுவான் அதுபோல.

அது, வசந்த காலம்—மனப் பருவத்தில்—அதாவது வேலனுக்கும் செல்லாயிக்கும், ............... ஆசை பொறந்த சமயம்........காதல் என்று பெயர் கூறத் தெரியாதல்லவா. கிராமத்தார்கள்தானே!

வேலன், குடிகாரக் கோவிந்தன் மகன். "இந்தப் பயலுக்கு அவங்க அப்பன் சுபாவம் கிடையாது. கள்ளுத் தண்ணியைக் காத தூரத்திலே கண்டாலே, வாந்தி எடுப்பான்" என்று வேலனைப்பற்றிப் பேசுவார்கள் ஊரார். மகன், மீசை கருக்கும் பருவம் வந்ததற்கும், கோவிந்தனுக்கு முடக்கு நோய் வந்ததற்கும், காலம் ஒத்து இருந்தது. ஆகவே, வேலன், விவசாய காரியத்தைக் கவனித்துக்கொண்டு, ஊருக்கு நல்லவனாக இருந்துவந்தான்.

"ரொம்பப்பொல்லாதும்மா, வேலு" என்று, அந்த ஊரிலேயே செல்லாயி ஒருவள்தான் சொன்னவள்.

பொல்லாதவனேதான் அவன். போகிறபோதும் வருகிறபோதும், என் செல்லாயியை அப்படிப் பார்க்க வேண்டும், விழுங்கி விடுவதுபோல. ஆனால், செல்லாயியை மட்டுந்தான்! கண், மேயும் சுபாவம் கொண்டதல்ல.

"ஏம்பா! வேலு!" என்று சிலர் தமாஷ் செய்வார்கள்.

"ஒண்ணுமில்லேண்ணன்!" மிகப் பணிவாக, புன்சிரிப்புடன் கூறுவான்.

* * *

"ஆசைக் கினியவளே!
அல்லிராணி!
அழகானமாதரசி அல்லிராணி!
அருகினிலே வருகலாமோ
அல்லிராணி!"

என்றுஅவன் பாடினபோதுதான், செல்லாயிக்கே புரிந்துவிட்டது, தனக்கும், வேலன்மீது பிரியம் என்ற உண்மை!

கிராமக்கூத்து —வேலன்தான் அர்ஜுனன். வேறே யாரப்பா ராஜா வேஷத்துக்கு ஆள் இருக்கிறாங்க— என்று கூத்துவாத்தியார் குமரேசன் சொன்னபோது, வேலனுக்குப் பூரிப்புதான். அர்ஜுனன் பாடுவதற்கு அவர் சொல்லித் தந்த பாட்டை, அன்று அவன் அவ்வளவு உருக்கமாகப் பாடினான். அல்லி வேஷம் போட்டவன் பக்கத்திலேயேதான் நிற்கிறான், வேலனோ, அவனைப் பார்த்துப் பாடவில்லை—நேரே செல்லாயிஇருக்கும் திக்குத்தான். அந்தப் பாடலை, பிரபல நடிகன்கூட, அன்று வேலன் பாடியதுபோல் பாடியிருக்க முடியாது. செல்லாயிக்குச் சமர்ப்பித்த பாடலல்லவா அது!

அன்று முதல், செல்லாயிக்கு அடிக்கடி, கொல்லைமேட்டிலே வேலையிருந்துவிட்டது. பக்கத்துக் கொல்லையைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டான் வேலன். ஒவ்வோர் நாளும், அல்லிராணி பாட்டுப் பாடுவான்.

சூது தெரிஞ்சிப் போச்சி,
உன் சூது
மாது, நான் அறிவேனே
உன் சூது

(13-ம் பக்கம் பார்க்க)

# கங்கை கொண்டான்

[இரா. நெடுஞ்செழியன்]

முரசம் ஆர்ப்ப, துந்துபி முழங்க, பல்லியங்கள் கறங்கப், போர்ப் படைகள் மீளுகின்றன! வெற்றிக்களி கொண்ட வீரர்கள் விண்ணதிர முழங்குகின்றார்கள்! புலி பொறித்த கொடிகள் தென்றலிலே துவளுகின்றன! நீள் முடி தரித்த மன்னர்களின் தலையிலே நீர்க் குடங்கள்! இவற்றை நடத்தி வருகின்றான் மகாதண்டநாயகன் என்ற பட்டம் பெற்ற படைத் தலைவன்! வெற்றி பெற்று மீளும்படையை வரவேற்கக் கோதாவிரி நதிக்கரையிலே நிற்கிறான்சோழ நாட்டு வேந்தன்! வாகை மாலை சூடிய வெற்றி வீரர்கள் 'வெற்றி மன்னன் கொற்றங் கொள்க' என்று கூறிக் 'கங்கை கொண்ட சோழன் வாழ்க' என்று வாழ்த்துகிறார்கள்! இக்காட்சியினை நடத்திக் காண்பித்தான் தமிழ் நாட்டு மன்னர் மன்னனாகிய முதலாம் இராஜேந்திர சோழன். கி. பி. 1023-ம் ஆண்டிற்கு முன் வடபுல மன்னர்கள் பலரைப் போர்க் களங்களிலேவென்று, கங்கைக்கரைவரை சென்று, கங்கைநீரைக்குடங்களிலே ஏந்தி, அக்குடங்களைப் பிடிபட்ட கொற்றவர்களின் தலை மீது ஏற்றி வரச் செய்தான் சோழனின் பெரும் படைத்தலைவன் என்றும், அப்படைத் தலைவனைக் கோதாவிரிநதிக்கரையில் நின்று வரவேற்றான் வேந்தன் என்றும் கன்னியா குமரிக் கல்வெட்டும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் கூறுகின்றன.

இந்திய வரலாற்றினை எழுத முற்பட்ட மேலைநாட்டாசிரியர்களும், கீழைநாட்டாசிரியர்களும் வடஇந்திய வரலாற்றினையே செம்மையுற வகுக்கப் பாடுபட்டனரே யன்றித், தென்னாட்டு வரலாற்றைத் தொகுத்துக் கூறப் பலகாலம் வரையிலும் முற்படவில்லை. தற்பொழுது தென்னாட்டின் பலபாகங்களில் சிதறிக் கிடக்கும் செப்பேடுகளையும், கல்வெட்டுகளையும், சாசனங்களையும் துருவித் துருவி ஆராய்ந்து மின்மினி ஒளிபோல் தென்னாட்டின் வரலாற்றினை ஒளிபெறச் செய்துள்ளார்கள். ஒருநாட்டின் வரலாறு நல்ல முறையில் அமைக்கப்படாவிடின் அந்நாட்டு மக்களுக்கு உணர்ச்சியைத் தூண்டுவதற்கு ஏற்றதொரு கருவியாகப் பிறிதொன்று கிட்டுவது அரிதாகும். கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரையில் தமிழ் நாட்டைத் தமிழ் வேந்தர்கள் ஆண்டுவந்திருக்கிறார்கள் என்பதற்குச் சங்க நூல்கள் சான்று பகர்ந்தாலும், அதுவும் முறையாகத் தொகுக்கப்பட்ட ஒரு வரலாறாகக் காணப்படவில்லை. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் தமிழ் நாட்டின் அரசியல் நடைமுறைகள் பற்றி ஒன்றும் தெளிவாக்கப்படாமல், அக்காலம் இருண்ட காலமாகவே இருந்து வந்திருக்கின்றது. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில்வாழ்ந்த சோழ அரசர்களின் வரலாறு ஓரளவுக்குக் கல்வெட்டு, செப்பேடுகள் ஆகியவற்றின் உதவி கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து தான் கி. பி. 1012-ம் ஆண்டிலிருந்து கி. பி. 1044-ம் ஆண்டு வரையில் தண்டமிழ் நாட்டையும் அதற்கப்பாற்பட்ட பல நாடுகளையும் ஒரு குடையின் கீழ்க் கொணர்ந்து சிறப்புடன் ஆண்ட முதலாம் இரஜேந்திரனின் ஆட்சியின் மாட்சி எடுத்துக் காட்டப்படுகிறது.

இராஜராஜனைத் தந்தையாகவும் இராஜாதிராஜனைத் தனயனாகவும் பெற்ற இராஜேந்திரன் 'கங்கை கொண்டான்' என்ற பெரும் புகழ்ப் பெயர் பெறுவதற்கு முன்பு போர்க் களங்கள் பலவற்றிலே புலியெனச் சீறிப்போரிட்டிருக்கிறான். இராஜேந்திரன், என்று தண்டு எடுத்து வந்து தம் நாட்டை அழிப்பானோ என்று மணி முடி தரித்த மன்னர் பலரும் அஞ்சியிருந்திருக்கிறார்கள். இராஜேந்திர சிங்கன் என்றே செப்பேடு ஒன்று கூறுகின்றது.

இர்ராஜேந்திரன் இளவரசனாக இருக்கும்போது தந்தை இராஜராஜன் கொண்டு சென்ற படையோடு உடன் சென்று பலபோர் புரிந்து வெற்றி கொண்டிருக்கிறான். தென்றிசை சென்று பாண்டியனைத் தாக்கினான். குடதிசை சென்று சேரனை அடிமைப்படுத்தினான். இதனால் இராஜராஜன் மும்முடிச் சோழன் என்ற பட்டப் பெயருக்குரியவனானான். பாண்டிய, சேரநாடுகள் சோழனின் ஒரு குடையின் கீழ் வந்தன. மேலைக் கடற்கரை ஓரமாயுள்ள விழிஞம் என்ற ஊரை வென்று பின் காந்தளூர்ச்சாலை என்னுமிடத்தில் சேரனின் கப்பற்படையைத் தன் கப்பற்படை கொண்டு தாக்கி அழித்தான். குடமலை நாட்டுப் போரில், இராஜேந்திரன், மகாதண்டநாயகன் என்ற படைத் தலைவனுக்குரிய பட்டப்பெயரோடு படையை நடத்திச் சென்று வென்றான். இதனால் கங்கமண்டலம் அடிமை கொள்ளப்பட்டது. இவையன்றித் துளப்பப்பாடியை (இக்காலத்திய சேலம், வட ஆற்காடு, பல்லாரி, கோலார், தும்கூர் அடங்கிய நிலபாகம்) இராஜராஜனும்இரோஜேந்திரனும்தாக்கி அதனைக் கைக் கொண்டனர். ஈழ நாட்டை (இலங்கையை) வென்று அதற்கு மும்முடிச் சோழமண்டலம் எனப் பெயரிட்டான். கங்கபாடி, தடிகைபாடி, சீர்ப்புலிநாடு, பாகிநாடு, வேங்கிநாடு, கலிங்கநாடு ஆகிய மேற்கு, வடக்கு நிலப்பாகங்கள் இராஜராஜனின் ஆணையின் கீழ் கொண்டுவரப்பட்டன. இராஜராஜன் கப்பற்படை ஒன்று கொண்டு சென்று 'முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரம்' என்று செப்பேடு கூறும் தீவுக் கூட்டத்தை (இன்று 'பால்திவ் என்று வழங்கப் பெறும்) வென்று அடக்கினான். இவையனைத்தும் இராஜராஜன் காலத்தில் கொள்ளப்பட்ட வெற்றிகள் என்றாலும் இவற்றில் இராஜேந்திரனுக்குப் பெரும் பங்கு உண்டு.

இராஜேந்திரன் அரியணையேறிய காலை அவன் ஆணையின் எல்லை தெற்கே ஈழத்தின் எல்லையைத் தொட்டு நின்றது; மேற்கேகரையை மோதும் கடல் அலையை போதிற்று; வடமேற்கே துங்கபத்திரை நதியின் கரையைத் தடவி நின்றது; வடக்கே வேங்கி நாட்டையும், கலிங்க நாட்டையும் உள்ளடக்கிக் கிடந்தது; கிழக்கே 'முன்னீர்பழந்தீவு பன்னீராயிரத்தை' முத்தமிட்டிருந்தது.

இராஜேந்திர சோழன் மன்னர் மன்னனாக ஆனபிறகு தன் முதல் மகனை இராஜாதிராஜனுக்கு இளவர

சுப்பட்டங்கட்டினான். அடுத்த மகனான சுந்தர சோழனைப் பாண்டிய நாட்டிற்கு மண்டலாதிபதியாக முடிசூட்டினான். இதனால் அவன் 'சுந்தர சோழ பாண்டியன்' என்று அழைக்கப்பட்டான். சிறிது நாளில் சேர நாடும் அவன் ஆட்சியின் கீழ் விடப்பட்டது. சேரநாட்டில் அவன் 'சுந்தர சோழ கேரளன்' என்று வழங்கப்பட்டான். இவ்வாறு இராஜேந்திரன் தன் ஆட்சியின் பொறுப்பைத் தன் பிள்ளைகளிடத்துப் பிரித்துக் கொடுத்த பிறகு வேற்று நாட்டுப் படையெடுப்பு, முற்றுகை, தாக்குதல், எதிர்த்து நிற்றல் ஆகியவற்றிலே தன் கருத்தைச் செலவழிக்க ஒருப்பட்டான்.

இராஜேந்திரன் கொண்ட வெற்றிகளில் மிகவும் சிறப்புடையன 'கங்கை கொண்டதும்' 'கடாரம் கொண்டதும்' ஆகும். கங்கைக் கரைக்குத் தண்டு எடுத்துச்செல்லும் பொழுது சோழன் பெரும் படைக்கு எதிராக வாளெடுத்து நின்ற மன்னர்கள் பலரும் தங்கள் மகுடங்கள் களத்திலே சிதற மண்டியிட்டு நின்றனர். சோழவல்லரசின் கீழ்ப்படுத்தப்பட்ட பகுதிகள் சக்ரகோட்டம் (மத்யமாகாணத்தின் பகுதி), மதுர மண்டலம், நாமணைக் கோணம், பஞ்சப்பள்ளி, மாசுணிதேசம் (மத்ய மாகாணத்தை ஒட்டிய பகுதிகள்), கோசலநாடு, ஒட்டரதேசம், தன்மபாலன் என்ற அரசன் ஆண்ட தண்டபுத்தி (பீரார்), இரணசூரன் ஆண்ட லாடதேசம் (வங்காளத்தின் பாகம்), கோவிந்த சந்திரன் ஆண்ட வங்காள தேசம் (கிழக்கு வங்காளம்) ஆகியவைகளாகும். இவையனைத்தையும் வென்று வெற்றிக்களிகொண்ட வீரர்கள் கங்கை நீரைக் குடங்களிலே ஏந்தி, மன்னர் தம் தலையிலே ஏற்றி இராஜேந்திரனிடம் காணிக்கையாக வைத்தனர். அது முதல் இராஜேந்திரன் கங்கை கொண்ட சோழன் என்று புகழப்பட்டான். வீரர்கள் வெற்றி முழக்கமிட்டனர். வெற்றி முரசங்கள் ஆர்த்தன. புலவர்கள் பரணி பாடினர். பிடிபட்ட மன்னர்கள் பன்மணிக் குவியலைப் பரிசாக அளித்தனர். வேந்தன் அப்பன்மணிக் குவியலைப் பாணர்க்களித்தான். அவ்வெற்றியின் நினைவுக்குறியாக ஒருநகர் கண்டான், அதுவே கங்கைகொண்ட சோழபுரம். ஒரு கோயில் கண்டான்; அதுவே கங்கை கொண்ட சோழீச்சரம். ஒரு ஏரி கண்டான்; அதுவே சோழ கங்கம்.

திருச்சி மாவட்டத்தில், உடையார்பாளையம் தாலுக்காவில் ஒரு சிற்றூராகக் காட்சி அளிக்கும் கங்கை கொண்ட சோழபுரம் இராஜேந்திரன் காலத்தில் ஒரு பெரிய நகரமாக விளங்கியது. வீரர்கள் விளையாடிய கோட்டங்கள், புலவர்கள் கூடிய மன்றங்கள், பெரியோர் வதிந்த பொதுயில்கள், மக்கள் வாழ்ந்த மணிமாடங்கள் கூடங்கள், காலையும் மாலையும் பேரிரைச்சலோடு விளங்கிய அங்காடி வீதிகள் ஆகிய அனைத்தும் இன்று கொடியும் செடியும் படர்ந்து, காடு கரம்புகளாகிக் காட்சி அளிக்கின்றன. வாழ்ந்த நகர் இன்று வீழ்ந்து கிடக்கின்றது!

கங்கை கொண்டானின் மற்றொரு நினைவுக்குறியாக வெட்டப்பட்ட சோழ கங்கம் என்னும் ஏரி பொன்னேரி என்று வழங்கப்படுகிறது. பதினாறு மைல் நீண்டு, பலம் பொருந்திய கரையைக் கொண்டிருந்த இவ்வேரி இப்பொழுது பெரும் பகுதி மணல் மேடிட்டுக் கிடக்கிறது. இவ்வேரிக்குக் கொள்ளிடத்தின் நீரைக் கொண்டு வருவதற்கு அறுபது மைல் நீளமுள்ள கால்வாய் ஒன்றை வெட்டினான். வறண்ட பாலை நிலத்தை வளமுள்ள பழமுதிர் சோலையாக ஆக்கினான். திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களின் பகுதிகளைச் செழிக்கச் செய்த இவ்வேரி, பண்படுத்துவாரின்றி வறண்டு பாலைநிலமாக இன்று காட்சியளிக்கிறது. வீரத்தால் வென்ற கங்கையின் நீரைத் தெளித்து நாடும், நகரமும், கோயிலும், ஏரியும் கண்டு வீரத்தை நிலைநாட்டினான் இராஜேந்திரன். வீரம் மறக்கப்பட்டது! எனவே நகரமும், கோயிலும், ஏரியும் மங்கி, மறைந்து காணப்படுகின்றன!

“அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்தி” என்று இராஜேந்திரனின் புகழினை எடுத்துக்கூறும் மெய்க்கீர்த்தியின் வாயிலாகப்பெரியதொரு கப்பற் படை வங்காள விரிகுடாவை அடக்கி ஆண்டுவந்தது என்பது புலப்படுகின்றது. 'கங்கை கொண்டான்' கப்பற்படை கொண்டு கடாரத்தை (மலேயா) தாக்கி கடாரத்தரசனைச் சிறைபிடித்து, யானைப் படையினையும், பன்மணிக் குவியலையும் பெற்று மீண்டான் என்று அறியப்படுகின்றது. இப்படையெழுச்சியில் கடாரத்தையன்றிப் பல்வேறு நாடுகளையும் வென்று அங்கெல்லாம் வெற்றிக்கொடி நாட்டினான். இப்படையெழுச்சி கி. பி. 1024-25ல் நடைபெற்றதாக வரலாற்றறிஞர்கள் கூறுவர். இவ்வெற்றியில் கங்கை கொண்ட சோழனின் வெண்கொற்றக் குடையின்கீழ்க் கொண்டுவரப்பட்ட நாடுகள் ஸ்ரீவிஜயம் (சுமத்ராவிலுள்ள பாலம்பாங் என்னும் மண்டிலம்,) பனி (சுமத்ரா தீவின் கிழக்கரையில் உள்ளது,) மலையூர் (ஜம்பி என்னும் நாடு என்று கூறுவர்,) மாயிருடிங்கம் (மலேயா தீபகற்பத்தின் மத்திய பாகத்தில் இருந்திருக்க வேண்டும் என்று கூறுவர்,) இலங்காசோகம் (மலேயாவில் கெடாவுக்குத் தெற்கே உள்ளது என்பர்,) மாப்பப்பாளம் (க்ரா பூசந்திக்குப் பக்கத்திலுள்ளது என்பர்,) மேவிலிம்பங்கம், வளைப்பந்தூறு, (மலேயாவின் தெற்கேயும், கிழக்கேயும் உள்ளன என்பர்), தலைத் தக்கோலம் (க்ரா பூசந்திக்குத் தெற்கே இருந்தது), மாதமாலிங்கம் (மலேயா தீபகற்பத்தில் தெம்லிங் என்று கூறப்படும் இடம் என்று கூறுவர்), இலாமுரி தேசம் (சுமத்ரா தீவின் வடபகுதியில் உள்ள நாடாகும்), மாநக்கவாரம் (நிக்கோபார் தீவுகள்) முதலியனவாகும். அக்காலத்தில் சீனாவுடன் வாணிகம் நடாத்திய தமிழ்நாட்டு வாணிகக் கப்பல்கள் கிழக்குத் தீவுகளின் முக்கிய துறைமுகப் பட்டினங்களில் தங்கிச் சென்றன. தமிழ் நாட்டின் கடற்கரைத் துறைமுகப் பட்டினங்களில் பண்டமாற்று நிமித்தம் அரேபியரும், பாரசீகர்களும், சீனரும், மலேயா ஜாவாக்காரர்களும் குழுமியிருந்தனர் என்பது அரேபியா, சீன நூல்களினின்றும் நன்று அறியப்படுகின்றன.

கங்கை கொண்ட சோழனான இராஜேந்திரனின் ஆணை வடக்கே கங்கைக்கரை வரையிலும், தெற்கே ஈழ நாட்டின் எல்லை வரையிலும், மேற்கே கடற்கரை வரையிலும், கிழக்கே சுமத்ரா வரையிலும் பரவியிருந்தது. இவ்வளவு பெரிய பேரரசை வைத்து ஆணை செலுத்திய பிற்காலத்திய தமிழ் நாட்டு வேந்தன் இராஜேந்திர சோழன் ஒருவனேயாகும். வாழ்க அவன் பெயர்!

அக்காலத்தில் சோழ நாட்டின் தலைநகராய் விளங்கியது தஞ்சை

நகரமாகும். கங்கை கொண்ட சோழபுரம் புதியதொரு பெரிய நகராக விளங்கிடினும் அரசிருக்கையாகத் தஞ்சையையே கொண்டார்கள். அரச குடும்பத்தினர் வாழ்ந்து வந்த அரண்மனை குடந்தையையடுத்த பழையாறை என்னுமிடத்தில் இருந்துவந்தது. இராஜேந்திரன் இளமைப் பருவத்தில் இராஜராஜன் தமக்கையான குந்தவையாலும், கண்டராதித்த சோழன் மனைவி செம்பியன் மாதேவியாலும் பழையாறை அரண்மனையிலேயே வளர்க்கப்பட்டான். இராஜேந்திரன் ஏறக்குறைய முப்பத்துமூன்று ஆண்டுகள் ஆட்சி செலுத்திவந்தான்.

இராஜேந்திரன்காலத்தில் சோழப்பேரரசு பல மண்டிலங்களாகப் பிரிக்கப்பட்டு, அரசனால் ஏற்படுத்தப்பட்ட மண்டலாதிபதிகளால் ஆட்சி செலுத்தப்பட்டு வந்தது. ஒவ்வொரு மண்டிலமும் பல வள நாடுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வளநாடும் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டும் இருந்தன. வளநாடுகள் கோட்டங்களெனவும், நாடுகள் கூற்றங்கள் எனவும் சில பகுதிகளில் வழங்கிவந்தன.

இராஜேந்திரன் பல விருதுகளையும் பெயர்களையும் தாங்கியிருந்தான் என்பது சாசனங்களால் அறியப்படுகின்றது. அவற்றுள் மதுராந்தகன், உத்தமசோழன், விக்கிரமசோழன், வீரராஜேந்திரன் போன்றவை இவனுக்கும் பிறசோழமன்னர்களுக்கும் பொதுவான பெயராகவும், இவனுக்கே உரியனவாக முடிகொண்ட சோழன், கங்கைகொண்ட சோழன், கடாரம் கொண்டான், பண்டித சோழன் என்பன வழங்கப்பட்டன.

இராஜேந்திரனுக்கு மக்கள் பலர் இருந்தனர். அவர்களுள் முக்கியமான மூவர் இராதிராஜன், இராஜேந்திரதேவன், வீரராஜேந்திரன் ஆகியோராவர். அரசமகளிர் வேட்டையாடவும், போர்க்களஞ் சென்று போர்புரியவும் செல்லும் வழக்கமுடையவர் என்பது தெரிய வருகின்றது. அரசன் விழாக்காலங்களில் 'அரசாங்க விருந்து' நடத்துவான் என்றும், அக்காலங்களில் பல்சுவைஉண்டி உண்டு, ஆடிப்பாடி பலரும் மகிழ்வர் என்று சீனநாட்டிலிருந்து வந்து சென்ற ஒருவர் சௌ-ஜா-குவா (chau-Ju-kua) என்னும் நூலில் எழுதிய குறிப்புகள் அறிவிக்கின்றன.

தந்தைக்குப்பிறகு மகனே அரசு எய்துவது என்ற முறை, வழி வழியாக வந்தபோதிலும், மக்களில் திறமையுடையோரையே தந்தை தேர்ந்தெடுத்தான் என்பது இராஜேந்திரன் தன் இளைய மகனாகிய இராஜாதிராஜனைப் பட்டத்துக்குரியவனாகத் தன் காலத்திலேயே தேர்ந்தெடுத்ததிலிருந்து தெளிவாகும்.

அரசன் முடிசூட்டிக்கொள்ளும் நாளன்று யானைமீதுஏறி அமைச்சர் குழாம், வீரர் குழாம், புலவர்குழாம் பாணர் குழாம் முதலாயினோர் புடைசூழ ஊர்வலம் வந்து, நீராட்டு மண்டபம் புகுவானென்றும், பல்வேறு நீர்நிலைகளிருந்து கொணர்ந்தநீரைப் பொற்குடங்களிலேந்தி அரசனை முழுக்காட்டிப், பின் வெள்ளுடை உடுத்தி அரியணையேற்றிப் பல்லியங்கள் முழங்க, பலரும் வாழ்த்த அவனுக்கு முடிசூட்டுவர் பெரியோர்என்றும் அறியப்படுகின்றன.

அரசனே எல்லா உரிமையும் கொண்டிருந்தான். அவனுக்குஉதவி புரிய அமைச்சர்கள் இருந்தார்கள். அரசனுக்கு உடன் இருந்து தக்கது கூறியவர்கள் 'உடன் கூட்டம்' என்றும் 'கூட்டப்பெருமக்கள்' என்றும் அழைக்கப்பட்டனர். அரசியலைநடத்தப்பல அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் கருமிகள், பணிமக்கள் என்று இருவகைப்பட்டனர். கருமிகள்பெருந்தரம், சிறுதரம் என இருவகைப்பட்டனர். இவர்களெல்லோரும் சம்பளம் என்றமுறையில்பெறுமல் நிலத்தையோ, அதன் வரும்படியையோ பெற்றுவந்தனர். அரசன்நேரே தன்நாடுகளைச் சுற்றிப் பார்ப்பது வழக்கம். அவ்வப்போது குடிமக்கள் தங்கள் குறைகளை நேரே அரசனிடம் எடுத்துக்கூறிக் குறைகளைந்து கொள்ளக்கூடும். அரசனிடம் கட்டளை பெறவேண்டியசெய்திகளைப்பற்றி 'உடன் கூட்டத்து'அதிகாரிகளில் ஒருவன் விண்ணப்பம் செய்வான். அதனைச் செவிமடுத்த அரசன்தானாகவோ அல்லது அமைச்சர்களைக்கலந்தோ 'முடிவு செய்து வாய்மொழியால் கட்டளையைப்பிறப்பிப்பான். அதைநிறைவேற்றிவைக்க 'ஆணத்தி'யைக் குறிப்பிடுவான். அதைக்கேட்டிருந்த 'திருவாய்க்கேள்வி' என்னும் அதிகாரி சொல்ல ஓலை எழுதும் அதிகாரியான 'திருமந்திர ஓலை' அதை எழுதி 'ஓலைநாயகம்' என்னும் அதிகாரியைக்கொண்டு ஒப்பிட்டபிறகு மற்ற அதிகாரிகளுக்கு அனுப்புவார்கள். அந்தஓலை தானம் கொடுக்கப்பட்டதைத் தெரிவிப்பதாக இருந்தால், அதைத் 'தீட்டுப்படி' 'புரவுவரி' என்போர் 'வரிப்பொத்தகம்' வரிப்பொத்தகக் கணக்கு ஆகியவற்றில் எழுதி 'வரியிலீடு' 'முகவெட்டி' 'கண்காணி' ஆகிய அதிகாரிகளுக்குக்காட்டிப் 'பட்டோலை' அதிகாரியைக்கொண்டுநாட்டார்க்குத் திருமுகம் அனுப்புவார்கள். இவர்களேயன்றி நிலவரி வசூலிக்கப்பல அதிகாரிகளும், கோயில் வரவு செலவைப்பார்க்கப்பல அதிகாரிகளும், கிராமங்களின் பல்வேறு துறைகளைக் கவனிக்கப் பல அதிகாரிகளும் இருந்தனர். வழக்குகளை ஆய்ந்து நீதிவழங்குவதற்கு 'நியாயத்தார்' எனப்படும் அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் 'தர்மாசனம்' என்னும் இடத்திலிருந்து வழக்குகளைஆய்ந்து வந்தனர். சிறியகுற்றங்கள்ஊர்ச்சபையினரால் ஆயப்பட்டு நீதிவழங்கப்பட்டுவந்தன. வழக்குக் கொண்டுவருபவன் முதலில் 'நியாயத்தார்' முன்னிலையில் 'முறைப்பாடு' செய்யவேண்டும். பின்முறையீடு செய்தவனைத் தன் கட்சியை ஆட்சி (வழக்கம்) 'ஆவணம்' (பத்திரம்) அயலார் தங்கள்சாட்சி (சாட்சி) ஆகிய மூன்றனுள் ஒன்றாலோ பலவற்றாலோ மெய்ப்படுத்தச் சொல்லுவார்கள். அப்படி மெய்ப்படுத்தின பிறகு மற்றவன் தானும் அவ்வாறே மறுத்துக்கூறுவான். அவற்றைக் கேட்டு உண்மை தெளிந்து நியாயத்தார் நீதி வழங்குவார்கள். பிறர் பொருளைக் கொள்ளை கொள்ளல், பிறன்மனைசேரல், கள்ளக் கையெழுத்திடல், ஆகியவை பெரிய குற்றங்களாகக்கருதப்பட்டன. தெரியாமல் செய்யும்குற்றங்கள் பொதுவாகமன்னிக்கப்பட்டன. சிலபெரிய குற்றங்களுககுக்குற்றவாளிகளைக்கழுதையின் மேல் ஏற்றி ஊர்சுற்றிவரச்செய்வதுண்டு. அரசுக்கு எதிராகக் குற்றம் புரிவோர் அரசனால் நேரே விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவர்.

அரசாங்க அதிகாரிகளுக்கு விருதுகளும், பட்டங்களும் வழங்கி வந்தனர். 'மாராயன்,' 'பேரரையன்' என்பன அப்பட்டங்களுள் சிலவாகும். 'மாராயன்' பட்டம் பெற்றோரின் மனைவிமார் 'மாராசி' என்று அழைக்கப்பட்டனர். படைத்தலைவர்களாகவும், அதிகாரிகளாகவும் உள்ளவர்களுக்கு 'மூவேந்தவேளாளன்'

(9ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 31—8—47 [ஞாயிறு


## உடனே செய்க

★

"அதிகாரம் நம்முடைய கையில் இல்லாத காரணத்தால், நம்முடைய குறைகளை, நமக்கு அதிகாரிகளாக இருப்பவர்களிடம் முறையிட வேண்டியிருக்கிறது. அப்படி முறையிட்டாலும் அக்குறைகள் நீக்கப்படுவதில்லை. நம்முடைய குறைகளைத் தீர்ப்பதற்குரிய வழி முறைகளை நாம் வகுத்துக் கொடுத்தாலும், அதிகாரிகள் அவ்வழி முறைகளில் தவறுகள் கண்டு பிடிப்பார்களேயன்றி நம்முடைய அடிப்படைக் குறைகளை அணுவளவும் சிந்தித்துப் பார்ப்பதில்லை--குறைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற நேர்மை அவர்களிடம் சிறிதும் ஏற்படுவதும் இல்லை. எனவே, இந்தக் கொடுமை ஒழிய வேண்டும்; நம்மை நாமே ஆளும் நல்ல நிலை உண்டாகவேண்டும்; அப்போது தான் நம்மவரின் குறையற்ற நிறைவாழ்வுக்கு வழிகோல முடியும்" என்று நம் நாட்டு அரசியல் தலைவர்களால் முன்பெல்லாம் கூறப்பட்டு வந்தது.

இப்போது அந்த நிலை மாறிவிட்டது. நம்மைநாமே ஆளும் வாய்ப்பும் பொறுப்பும் கிடைத்து விட்டது என்று பூரிப்புக்கொள்ளும் இந்நாளிலும் நம்முடைய நியாயமான குறைகள் நீக்கப்படாமல் இருப்பதற்கு எந்த விதமான காரணமும் கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது. நம்மவர்க்கு ஏற்பட்டுள்ள குறைகளைத் தீர்த்து, அவர்களின் நல்வாழ்வுக்கு வழி கோல வேண்டுமென்ற நல்லெண்ணம் படைத்த சர்க்கார், தன் கடமையைச் செய்ய ஒரு போதும் தயங்காது என்றுதான் அந்தச் சர்க்காரின் கீழ் வாழும் மக்கள் நம்புவர், தங்களின் நியாயமான குறைகள் தீர்க்கப்படும் என்றும் எதிர்பார்ப்பர்.

இப்போது மலேயாவிலுள்ள ரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்து வரும் தமிழ்மக்களுக்கு அத்தோட்ட வெள்ளை முதலாளிகள், அவர்களுக்குப் போதிய ஊதியம் கொடுக்காமலும், இப்போது கொடுக்கப்பட்டு வந்த ஊதியத்திலும் இருபது சதவிகிதம் குறைத்துக் கொடுத்தும் அவர்களை மீளமுடியாத வறுமைப் படுகுழியில் தள்ளிவிடுவதும், அதே நேரத்தில், அத்தோட்டங்களில் தமிழ் மக்கள் செய்யும் அதே வேலையைச் செய்யும் சீன மக்களுக்குத் தமிழ் மக்களுக்குக் கொடுக்கப்படும் கூலியைவிட இரட்டிப்புக் கூலி கொடுப்பதுமான கொடுமை நடந்து வருகின்றது.

மலேயா ரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்யும் மக்கள் தங்கள் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக ஒருநாள் வேலை நிறுத்தம் செய்து தங்கள் குறையை முறையிட்டுள்ளனர். என்றாலும் வெள்ளை முதலாளிகள் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. இந்த நிலையில், நாமும் வாளா இருந்தால், நம்மவர்க்கு நாமே கேடு தேடிக் கொண்டவர்களாவோம். எனவே, தமிழ் மக்களின் நல்வாழ்வில் உண்மையான அக்கரை கொண்ட அனைவரும், மலேயா ரப்பர்த் தோட்டங்களில் கிடந்து அல்லற்படும் தமிழ் மக்களின் குறைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றிச் சர்க்காருக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்வதோடு, சர்க்காரும் இந்த விஷயத்தில் பிறருடைய தூண்டுகோலை எதிர்பார்க்காமல், தானே முன்வந்து இந்தக் கொடுமையை ஒழித்து, அவர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றி வைக்கும் என்றும் நம்புகிறோம். இது, உடனடியாகச் செய்யப்பட வேண்டிய காரியம் என்பதை மீண்டும் ஒரு முறை நினைவூட்டுவதன் வாயிலாகத், திராவிடர் கழகங்கள், தமிழர் கழகங்கள், மற்றும் தமிழ் மக்களின் நலனில் பற்றுள்ள கழகங்கள் அனைத்தும் கட்சி வேறுபாடு கருதாது மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

✲

## அன்பளிப்பு

—

ரங்கூனில் இருக்கும் நியூ பாரத் ஓட்டல் சொந்தக்காரர் தோழர் டி. வி. சாமி அவர்கள் "திராவிட நாடு" வளர்ச்சிக்காகத் தந்துதவிய அன்பளிப்பு ரூபா ஐம்பதும் நன்றியறிதலுடன் பெற்றுக்கொண்டோம்.

9-ம் பக்கத் தொடர்ச்சி

லும் சீரும் சிறப்பும் எய்தி ஓங்கு புகழ் பெற்றிருந்த கங்கைகொண்ட சோழனின் பேரரசுக்கு எடுப்பாகவோ, இணையாகவோ வேறு அரசு உலகில் வேறு எங்கணும் அக்காலத்தில் இருந்ததில்லை. தமிழ் நாட்டின் வீரத்தைப்—பெருமையைப்-புகழை உலகு உவக்கும்படி எடுத்துககாட்டி, சின்னங்களால் நிலைநிறுத்தி மறைந்த மாவீரனின்—மன்னர் மன்னனின்-மங்கா முடிதரித்து மாநிலங் கண்டு நடுங்கும்படி செய்த மறத்தமிழனின்-'கங்கைகொண்டானின்' மாப்புகழ் வாழ்க! வாழ்க!! என்று வாழ்த்துவோம்.

12-ம் பக்கத் தொடர்ச்சி

காளிகள், காங்கிரஸ் தலைவர்களுக்கு இந்தத்தகவலைத் தந்திமூலம் தெரிவித்துள்ளனர். தலைவர்கள் நிச்சயமாக, இந்தச் செயலைக் கண்டித்து, பீகாரிகளுக்குப் புத்திமதிபுகட்டுவர். யாரோ காலிகள் செய்யும் காரியம் என்று கூறிவிட்டு, வேறு வேலையைக் கவனிப்பார்கள். பீகாரியின் மனநிலை மூண்டுள்ள, குரோதமோ, வளர்ந்து வரும். வங்காளி வாழுகிறான் வளத்துடன்—நாம் வதைகிறோம் வறுமையில். வங்காளி நமது நாட்டிலேயே புகுந்துகொண்டு சீமானாக வாழுகிறான்; நாம், பிறந்த நாட்டிலேயே வறியராய் இருக்கிறோம், என்று எண்ண எண்ண வங்காளிமீது பீகாரிக்குக் கோபம் வளரத்தானே செய்யும்.

வங்காளிக்கும் பீகாரிக்கும் இடையே இந்த வெறுப்பு உணர்ச்சி வளருகிறது என்றால், பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தையே, 'குத்தகை'க்கு எடுக்கக் கூடிய அளவு பொருளாதார பலம் பெற்றுள்ள வடநாட்டினிடம், (குறிப்பாக பம்பாய், குஜராத் பகுதிகளிடம்) மலாய் முதலிய நாடுகளுக்குக் கூலிகளை அனுப்பிக்கொடுக்கும் கேவல நிலைமையில் உள்ள திராவிடம், எப்படிப் பாசம் காட்ட முடியும்? அன்பு சுரக்கும்? வடநாடு—தென்னாடு, எனும் பேத உணர்ச்சி வளரத்தானே செய்யும். அதிலும் வடநாடு, சீமையாகிக் கொண்டும் திராவிடம் பட்டிக்காடு ஆகிக்கொண்டும், வரவர, இந்தப் பேத உணர்ச்சி வலுப்பெறத்தானே செய்யும். இதனைப்பயித்யகாரத்தனம் என்று பேசி, மறைக்கப்பார்க்கும் குறைமதியினரை, நாம் என்னவார்த்தைகூறி அழைப்பது? கூசுகிறோம், கூற—மனதிலேயோ மளமளவென்று வார்த்தைகள் கூத்தாடுகின்றன.

—

7-ம் பக்கத் தொடர்ச்சி

போன்ற பட்டங்கள் அளிக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் எப்பொழுதும் அணிவகுத்து நின்றனர். யானைப் படையும், குதிரைப் படையும், காலாட் படையும் போர்ப் படைகளாக விளங்கிவந்தன. ஒவ்வொரு படையும் பல பிரிவுகளாக அமைந்திருந்தது. வீரர்கள் வில், அம்பு, வேல், வாள் ஏந்திப் போரிட்டனர். 'மும்முடிச் சோழத் தெரிந்த ஆனையாட்கள்' என்பதுபோன்று ஒவ்வொரு படைப்பகுதியும் ஒவ்வொரு பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. வலிமையுள்ள கப்பற்படை அலைகடலில் எப்பொழுதும் மிதந்து நின்றது. ஈழநாடும், முன்னீர்ப் பழந்தீவும், கடாரமும், சுமதராவும் கொள்ளச், சோழனுக்குக் கப்பற்படையே உதவி செய்தது.

இராஜேந்திர சோழன் காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு கிராமசபை இருந்து மக்களின் நலன்களைப் பாதுகாத்து வந்தது. ஊரிலுள்ள ஆண்மக்கள் யாவரும் ஊர்ச்சபையின் உறுப்பினராவர். என்றாலும் 'ஆளும் கணத்தாரே' ஆட்சி செலுத்தி வந்தனர். இவ்விதம் இருந்த கூட்டத்திற்குச் 'சபை' என்று பெயரிட்டழைக்கப்பட்டது. வணிகர் முதலானோர்க்கும் 'வளஞ்சியத்தார்,' 'மணிக்கிராமத்தார்,' 'நகரத்தார்' என்பனபோன்ற தனித்தனிச் சபைகள் இருந்தன. இவையேயன்றி கோயில் வழிபாடு, நீர்ப்பாசனம் ஆகியவற்றைக் கவனிக்க வேறுவேறு சபைகள் இருந்தன. இவையனைத்தும் ஒன்றிற்கொன்று தொடர்புடையன. 'சபை'யின் உறுப்பினர்களைப் பொது மக்கள் ஆண்டு தோறும் 'குடவோலை' வாயிலாகத் தேர்ந்து எடுப்பார்கள். உறுப்பினர்கள் புலமை நிரம்பினோராயும், நடுநிலைமையாளராகவும், நாற்பது வயதுக்கு மேற்பட்டவராகவும் இருக்கவேண்டும். சிறு குற்றத்திற்கும், குறைபாட்டிற்கும்ஆளானோர்களும், ஒருதடவை உறுப்பினராய் இருந்தோரும் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள்.

அரசாங்கத்தின் முக்கியவருவாய் நிலவரியாகும். இது நீர்வளம், நிலவளத்திற்குத் தக்கவாறு விதிக்கப்பட்டது. நன்செய், புன்செய், தோட்டக்கால் என்பன போலப் பலவகையாக நிலம் பாகுபடுத்தப் பட்டிருந்தது. நிலவரியன்றி குடிமக்கள்வேறு பல 'சில்லிறை'களையும் அரசனுக்குக் கொடுத்து வந்தனர். அவை 'ஊரிடுவரிப்பாடு' என்று கூறப்படும் கண்ணாலக்காணம், குசக்காணம், நீர்க்கூலி, மீன்பாட்டம், தறியிறை, தரகு, தட்டாரப்பாட்டம், ஓடக்கூலி, செக்கிறை, வண்ணாரப்பாறை, நாடுகாவல், உல்கு, ஈழம்பூட்சி என்பன போன்றனவாகும். இவற்றிலிருந்து அக்காலத்தில் தொழில் செய்வோர் தொழில் வரி செலுத்தி வந்தனர் என்பது தெளிவாகின்றது.

கங்கை கொண்டசோழன் காலத்தில் தமிழர் வாணிகம் சீனாவுக்கும் சுமத்ராவுக்கும், அரேபியாவுக்கும் சென்று புகழ்பெற்றிருந்தது என்பது சீனாவில் எழுதிவைக்கப்பட்டுள்ள குறிப்பு நூல்களிலும்,சுமத்ரா கல்வெட்டுக்களிலும், அரேபியா குறிப்புகளிலும் காணக் கிடக்கின்றது. ஏற்றுமதி, இறக்குமதிச்சரக்குகளுக்குச் சுங்கவரி விதிக்கப்பட்டது. பணமும் 'கையெழுத்து ஓலை'யின் மேல் கொடுக்கப்பட்டு வந்ததால் நாணயச் செலவாணியும் ஓங்கிவளர்ந்தது. தமிழ் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் முக்கியமானவை முத்து, தந்தம், பவழம், கண்ணாடிக்கல், பாக்கு, சந்தனக் கட்டை, ஏலம்,பளிங்குக்கல், துணி, சாயம்தோய்த்த பட்டுநூல் கலந்த துணி, வாசனைப் பொருள்கள் முதலியனவாகும்.

சோழ சாசனங்களில் பலவிதமான நாணயங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. கழஞ்சு என்னும் தங்கக்காசு பெருவழக்குடையதாக இருந்திருக்கிறது. காசு, மஞ்சாடி, கருங்காசு, ஈழக்கருங்காசு, கச்சாணம், அக்கம், திரமம் போன்ற பல வேறு நாணயங்கள் வழக்கிலிருந்திருக்கின்றன. சாசனங்களில் பல்வேறு வகைப்பட்ட எடுத்தலளவை, நீட்டலளவை, முகத்தலளவைஆகியவற்றின் பாகுபாடமைந்த பெயர்கள் காணப்படுகின்றன.

சோழர் ஆட்சிக் காலங்களில் பல்வேறு சமயத்தாரும் தங்கள் தங்கள் விருப்பப்படி சமயக் கொள்கைகளைப் பரப்பவும், வழிபடவும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. சோழ அரசர்கள் கோயில் எழுப்புவதில் எவ்வளவு தனித்திறமை கொண்டிருந்தார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தஞ்சைப் பெரியகோயிலும், கங்கைகொண்ட சோழீச்சரமும் விளங்குகின்றன. வடநாட்டு அரசர்கள் போல் சோழஅரசர்கள் யாகம் செய்வித்ததாகயாண்டும் காணப்படவில்லை. ஆனால்பார்ப்பனர்களுக்கு வரிசெலுத்தப்படவேண்டாமல் பல நிலங்களை மான்யங்களாகக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பகுதிகள் 'சதுர்வேதிமங்கலங்கள்' என்று வழங்கப்பட்டன.

குடிமக்களுக்கு நலன்பயக்கும் பொருட்டு ஆங்காங்கு மருத்துவச் சாலைகள் ஏற்படுத்தப் பட்டன. அக்காலத்தில் தஞ்சையில் 'சுந்தரசோழ விண்ணகர் ஆதுலசாலை' என்று ஒரு மருத்துவச்சாலை இருந்தது. அதனை இராஜராஜன் தமக்கையான குந்தவை மேற்பார்வை பார்த்து வந்தாள் என்று அறியப்படுகின்றது.

அக்காலத்தில் திருமுக்கூடலில் ஒருபல்கலைக்கழகம்நிறுவப்பட்டிருந்தது. அதனை யொட்டி ஒரு அன்ன சாலையும் ஒரு மருத்துவசாலையும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இது ஒரு வைத்தியக் கல்லூரியாகவும் இருந்து வந்ததாகத் தெரிகிறது. மருத்துவச் சாலையை நடத்த ஒரு 'வைத்தியம் சொல்வானும்', மருந்துப்பொருளைக் கொண்டு வர இரண்டு பெண்களும் இருந்திருக்கின்றனர். தென்னாற்காடு மாவட்டத்தில் எண்ணாயிரம் என்னுமிடத்தில் இராஜேந்திர சோழன் காலத்தில் ஒரு கல்லூரி நிறுவப்பட்டுஅது,பதினான்குஆசிரியர்களையும்,இருநூற்றுஎழுபதுசிறுமாணவர்களையும், எழுபது பெரியமாணவர்களையும் கொண்டிருந்தது. மாணவர்கள் கங்கைகொண்ட சோழன் மண்டபத்தில் நாள்தோறும் உணவருந்தினர். ஆசிரியர்களுக்கு நெல்லும், பொன்னும் கொடுப்பதற்கு இரண்டு சிற்றூர்களில் நாற்பத்தைந்து வேலி நிலம் தானம் கொடுக்கப்பட்டது.

சோழர் ஆட்சிக்காலத்தில் சைவ, வைணவ, சமண, பௌத்த ஆசிரியர் பலராலும் இலக்கண, இலக்கிய, காவியங்கள் பலவும் தமிழில் எழுந்தன. வேந்தர்கள் தமிழ்ப்புலவர்களைப் போற்றிவந்திருக்கிறார்கள். தமிழைப் போற்றியது போலவே வடமொழியையும் போற்றி வளர்த்து வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு பல்வேறு துறைகளி

(8-ம் பக்கம் பார்க்க)

# ஊராள்வோரும் உணவும்

✻

"என்ன சார் செய்வது! கண் எதிரே நடக்கிறது அக்ரமம். கையும் பிடியுமாகப் பிடிக்கலாம். ஆனால், ஆசாமிக்கு இருக்கும் செலவாக்கு சாமானியமல்லவே! அந்த ஆசாமி கூப்பிட்ட குரலுக்கு, ஆட்சி நடத்தும் காங்கிரசே ஓடிவந்து கைகட்டி வாய்பொத்தி நிற்குமே, நான் என்ன செய்வது?" என்று விசாரத்தோடு, கூறிக்கொண்டே இருந்தார் மிஸ்டர் விஷயமறிந்தான். இதுகேட்ட தினசரிஆசிரியருக்குக்கோபம் பிறந்தது, மேஜையை ஓங்கி ஒரு தட்டுத் தட்டினார்-தட்டிவிட்டுக் கூறினார், "அக்ரமம்செய்கிறார் ஒரு ஆசாமி என்றால், அவர் எப்படிப்பட்ட அபாரமான செல்வாக்குப் படைத்திருந்தாலும், அவருக்கு உடந்தையாகவோ, உதவியாகவோ எந்தவகையான சக்தி கிளம்பினாலும், அச்சக்தியை தாட்சணியம் இன்றிஆசாமியைக் கையும் பிடியுமாகப்பிடிக்கத்தான் வேண்டும். இது காங்கிரஸ் ராஜ்யம்! கங்காணிகள் ராஜ்யமல்ல! சுயராஜ்யப்போர் நடத்தி வெற்றிபெற்ற காங்கிரசார் ஆள்கிறார்கள் — சூட் பூட்ஸ் அணிந்த துரைகளுக்குச் சலாமிட்டு வாழ்ந்தவர்களின் ஆட்சி அல்ல. அது கவனமிருக்கட்டும்" என்று கூறினார். அவருடைய பேச்சிலே, கோபம்மட்டுமல்ல, உறுதியும் இருந்தது. அந்தப்பேச்சைக்கேட்ட விஷயமறிந்தான், கல கலவெனச் சிரித்தார்-உண்மையிலேயே அந்தச் சிரிப்பு ஆசிரியருக்கு இருந்த கோபத்தை அதிகப்படுத்திற்று. ஆனால் அவர் அதனை வார்த்தைகளாக்கி வீசுவதற்குள், விஷயமறிந்தான் பேசலானார்.

"தாங்கள் கூறியது அவ்வளவும் நியாயமானது—யாரும் மறுக்கமுடியாதது. ஆனால் நடைமுறைக்கு, ஒத்துவரவில்லையே. நாட்டுமக்களுக்குநாசமும், சர்க்காருக்குக் கெட்ட பெயரும், ஏற்படக்கூடியவிதத்திலேதான் அந்த ஆசாமிகள் நடந்துகொள்கிறார்கள். சொந்த இலாபம் ஒன்றேஅவர்கள் குறி. கூச்சமின்றி நடத்துகிறார்கள், கள்ளமார்க்கட்; தெரிகிறது. சட்டம் பேசப்போனால், அதிகாரத்தைக்காட்டப்போனால், என்னசொல்கிறார்கள் தெரியுமோ?"

"என்ன சொல்கிறார்கள்?" ஆசிரியர் கேட்டார்.

"சுயராஜ்யப் போராட்டத்துக்கு நான் எவ்வளவு உதவி செய்திருக்கிறேன் தெரியுமா? என் உதவியின்றியா, இன்று இவர்களெல்லாம் ஊராளும் நிலை பெற்றுவிட்டார்கள்.

நான் வளர்த்த காங்கிரஸ்—நான் பார்த்து ஆட்சியிலேஉட்காரவைத்திருக்கிறேன். அப்படிப்பட்ட என்னை, அதே காங்கிரஸ் ஆட்சியாளரைக் கொண்டு, பைத்பக்காரா, தண்டிக்க முடியுமென்று எண்ணுகிறாய்? நடக்கக் கூடிய காரியமா! என்பெயரைக் கூறிப்பார்! எத்தனை மந்திரிமார்கள் நடுநடுங்குகிறார்கள், பார்! என்று கூறிவிட்டு அந்தஆசாமி சிரிக்கிறார்! ஆசிரியரே! அவர் பேசுவது பொய்யும் அல்ல. உண்மையாகவே இப்போது கள்ளமார்க்கட் வியாபாரத்திலே கொள்ளை இலாபம் அடித்துக்கொண்டு, நாட்டிலேபஞ்சம்ஏற்படும் காரியத்தைச் செய்துவரும் அதே ஆசாமிதான், காங்கிரசுக்குத் தூண், சுயராஜ்யப்போராட்டத்தின்போது, உதவி செய்தவர். இந்தத்தர்ம சங்கடத்துக்கு என்ன பரிகாரம்?" என்று கேட்டார்....

"கவலைப்படாதீர்! இதோ, தீட்டுகிறேன் ஓர் தலையங்கம் — திக்குமுக்காடச் செய்கிறேன் உணவுத்திருடர்களை" என்று கூறிவிட்டு, தினசரி ஆசிரியர், அன்னவிசாரம் என்ற தலைப்பிட்டு, அனலடிக்கும் ஓர் தலையங்கத்தை 26ந் தேதி தீட்டினார்.

* * *

1. நிலச்சுவான்தார்கள் எவ்வளவு தானியத்தைச் சர்க்காருக்கு விற்கமுடியுமோ அவ்வளவையும் விற்கவில்லை.

2. பலர் ஏராளமாகப் பதுக்கி வைத்திருக்கிறார்கள்.

3. சிலர் கள்ளமார்க்கட்டுகளில் விற்பனை செய்கிறார்கள்.

4. இன்னும் சிலர் இலங்கைக்குத் திருட்டுத்தனமாக அனுப்பிக் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள்.

அந்தத் தலையங்கத்திலே காணப்படும் வாசகங்கள்.

திட்டம், தெளிவு, கோபம், இவ்வளவும் அழகாக இருக்கிறது. ஆனால் ஒன்றுமட்டுந்தான் இல்லை—என்ன அது? தைரியம்! தைரியம் காணோம்! யார், இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள் என்பதை வெளிப்படையாக எடுத்து எழுதத் தைரியம் இல்லை. ஒரு சமயம், தினசரிக்கே தெரியாதுபோலும், என்று கூறமுடியுமா? கூற இயலாது ஏன்? நான் மேலே குறித்துள்ளபடி, விஷயமறிந்தவருக்கும் ஆசிரியருக்கும், உரையாடல் நடந்திருக்க வேண்டும், அதன் பயனாக, எங்கெங்கு யாரார், உணவுப் பொருளில் கள்ளமார்க்கட் செய்து ஊரைக் கெடுக்கிறார்கள் என்பது ஆசிரியருக்குத் தெரிந்தே இருக்கவேண்டும். தெரியாமல் "சில சுயநலமுள்ள காங்கிரஸ்காரர்களையோ கொஞ்சமும் லட்சியம் செய்யாமல், உணவு சேகரிப்பை சர்க்கார் நடத்திவைக்க வேண்டும்."

"........சிலரோ, பலரோ, காங்கிரஸ் சுயராஜ்யப் போராட்டம் நடத்திய காலத்தில் உதவி செய்தவர்களா யிருக்கலாம்."

என்று தினசரி அதே தலையங்கத்திலே எழுதி இருக்கமுடியுமா! எனவே, யாரோ விஷயமறிந்தவர்கள், ஆசிரியரிடம், உண்மையை விளக்கி விசாரப்பட்டு இருக்கிறார்கள், காங்கிரசார் 'சிலரோ, பலரோ' கள்ளமார்க்கட் காரியம் செய்கிறார்கள், அவர்கள் முன்பு சுயராஜ்யப் போருக்கு உதவிசெய்தவர்களாகையால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கு மனம் இல்லை, ஊர் சிரிக்குமே, கட்சியின் பெயருக்கே இழுக்காகுமே என்று பயம் பிறக்கிறது காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கு என்று ஆசிரியரிடம்கூறி இருக்கிறார்கள். இதைத் தெரிந்து கொண்டதாலே தான் 'தினசரி' திட்டமாகத் தீட்டுகிறது, சுயநலமுள்ள காங்கிரசார் சிலர், இக்கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர் என்று. அவர்களைத் தாட்சணியமின்றித் தண்டிக்க வேண்டும் என்றும் தைரியமாகக் கூறுகிறது—ஆனால், அவர்கள்யார்? அந்தஇடம் வரும்போது, தைரியம், ஒத்துழைக்க மறுக்கிறது!

வேடிக்கை இது மட்டுமல்ல. உணவு நெருக்கடி, ஊர் க்களைமிரட்டும் அளவுக்கு முற்றிக் கொண்

டிருக்கும் நேரம் இது. இதேபோது, நெல்லைப் பதுக்கியும், கள்ளமார்க் கட்டில் விற்றும், திருட்டுத்தனமாக இலங்கைக்கு அனுப்பியும் வருபவர்கள் இருக்கிறார்கள். இந்தத் தகவலை, ஒரு காங்கிரஸ் ஏடே கூறுகிறது—அந்தக் கள்ளர்களில் காங்கிரசாரும் உள்ளனர் என்றும் கூறுகிறது. அது மட்டுமல்ல. மேலும் ஒரு வாசகம் பாருங்கள், அந்தத் தலையங்கத்தில்,

“யார் திருட்டு வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் என்பதைச்சர்க்கார் அறிவார்களாகையால் ஆசாமிகளைக் கண்டுபிடிக்க வேண்டிய கஷ்டமில்லை.”

இப்படி எழுதி இருக்கிறது தினசரி. இந்த வாசகத்தின் பொருளைச் சற்றுக் கவனியுங்கள்.

திருட்டு வியாபாரம் செய்பவர்கள் யார் என்று சர்க்காருக்குத் தெரியுமாம்! அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டிய கஷ்டமில்லையாம்.

செ! நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகத்தோன்றும், ரோஷமுள்ளவர்கள் யாருக்கும். திருட்டுவியாபாரம் செய்பவர்கள் யார் என்று சர்க்காருக்குத் தெரிந்தும் அவர்களைக் கையும் பிடியுமாகப் பிடித்துத் தண்டிக்காமல் இருப்பது நீதியா! இந்த அக்ரமம் அடுக்குமா? திருட்டு வியாபாரத்தை நடத்துபவர் யார் என்று கண்டுபிடிக்கமுடியாமல் சர்க்கார் திண்டாடுகிறது என்றால், திறமைக் குறைவு என்றுமட்டும் ஏற்படும். அதுவும் கண்டனத்துக்கு உரியது தான்—என்றபோதிலும், கேலி, பரிதாபம், இரண்டோடும் கலந்துவிடும் கண்டனம். ‘தினசரி’யின் வாசகத்தின்படி பார்த்தால், சர்க்கார், யார், கள்ளவியாபாரம் செய்கிறார்கள் என்பதைத்தெரிந்திருந்தும் சும்மாஇருப்பதாக அல்லவா, ஏற்படுகிறது. இது, உடந்தையாக இருக்கும்போக்காகுமே—மன்னிக்கமுடியாத குற்றமல்லவா இது? மக்களுக்குச் செய்யும் மாபெருந் துரோகமாகுமே! எப்படி இதனை அனுமதிப்பது? ஏன், சர்க்கார், கள்ளமார்க்கட்டுக்காரர் யாரார் என்று தெரிந்தும்,அவர்களை விட்டுவைத்திருக்கிறது?

அன்ன விசாரம் மட்டுமல்லவே, இந்த அக்கிரமமான நிலைமையைஉணரும் போது, மக்கள், வேதனை, எப்படி இருக்கும். எந்தச்சர்க்கார், மக்களின் சொந்தச் சர்க்கார் என்று மனமாரநம்பினார்களோ, அந்தச்சர்க்கார் ஆட்சியிலே, கள்ளமார்க்கட் இருப்பதே கேவலம், இப்போது, கள்ள மார்க்கட் இருப்பதுமட்டுமல்ல, யாரார் கள்ள மார்க்கட்டுக்காரர்கள் என்பது சர்க்காருக்குத் தெரியும்—தெரிந்தும் சும்மா விட்டுவைத்திருக்கிறார்கள்—அவர்களில் சிலர் சுயநல முள்ள காங்கிரஸ்காரர் — சிலரோ பலரோ, சுயராஜ்யப் போரின்போது உதவி செய்தவர்கள்—என்று, காங்கிரஸ் ஏடான தினசரி அல்லவா கூறுகிறது. இது, வேதனை,வெட்கம், இரண்டையும் சமஎடையாகக் கூட்டித் தரும் நிலையாயிற்றே. எப்படி இதை உண்மைக் காங்கிரஸ் நண்பர்கள், சகித்துக்கொள்ள முடியும்.

சர்க்காருக்குத் தெரியும், யாரார் கள்ளமார்க்கட் செய்பவர்கள் என்று.

தெரிந்தும் சும்மா இருக்கிறார்கள்.

இதைவிடக் கேவலமான நிலைமை, எந்தநாட்டுக்கும் ஏற்படமுடியாதே. ஏன் இங்கு அனுமதிக்கப்படுகிறது?

கள்ளமார்க்கட்காரர்களிடம்கிலி, அல்லது பாசம், கொள்வது ஆட்சியாளரின் போக்கு என்றால், கள்ளமார்க்கட்காரர்களைவிட, அந்த ஆட்சியாளர்கள், மக்களின் கண்டனத்துக்கு உரியவர்களாகின்றனர்.

நள்ளிரவில் கொல்லைக் கதவைத் திறந்துவைத்து, கள்ளன் உள்ளே நுழைந்து வீட்டிலுள்ள பொருளைக் களவாடிக்கொண்டுபோக, உடந்தையாக உள்ள ஊழியக்காரன், அந்த வீட்டாரால் மட்டுமல்ல, ஊராராலேயே கண்டிக்கப்படுவான்.

தினசரியின் வாசகம், ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டால், இந்தத் துணைக்கண்டம் மட்டுமல்ல, உலகே கண்டிக்கும் இந்த ஆட்சியாளர்களின் போக்கை.

ஆட்சியாளர்களின் போக்கு இது. ஆசிரியராவது ஏன்,தமக்குக்கிடைத்துள்ளதகவலை, பொதுமக்களுக்குத் தரக்கூடாது? ஏன் தயக்கம்? பம்பரமாடும் பருவத்திலுள்ள பாலர்களின் போக்கிலே ஒருயோசனை கூறுகிறார், ஆசிரியர்.

“ஒவ்வொரு ஊரிலும் யாரிடம் அதிகப்படியான தானியம் இருக்கிறதென்று சர்க்கார் நினைக்கிறார்களோ, அவர்களுடையஜாபிதாவை ஒவ்வொரு தாலுகா ஆபீசிலும் சர்க்கார் பிரசுரிக்கவேண்டும்”

இந்த ஜாபிதாவைப் பிரசுரிப்பானேன்? ஜாபிதாவைத் தயாரித்து, சர்க்கார் தன் அதிகாரத்தைப் பிரயோகித்தால், நெல்லை மலைமலையாகக் குவிக்கலாமே, பஞ்சத்தை விரட்டலாமே.

ஜாபிதாவை பிரசுரிப்பதாம்!!ஏன்? ஆசிரியர் கூறுகிறார்மற்றோர் அபூர்வ யோசனை.

“எந்த ஊரில் யாரிடம் அதிக தானியம் இருக்கிறதென்ற விவரம் ஜனங்களுக்குத் தெரியவேண்டும், அப்படித்தெரிந்துவிட்டால், தற்சமயம் கொடுக்கமுடியாது என்றுசொல்லும் பிரபுக்களிடம் எப்படித் தானியத்தை வாங்குவதென்பது ஜனங்களுக்குத்தெரியும்!”

என்ன இதிலே தொக்கியுள்ள பொருள்? ஜனங்கள் உள்ளேபுகுந்து கொள்ளையடிப்பார்கள் என்பது தானே. இதற்கு, எங்கெங்கு புகுந்தால் கொள்ளை அடிக்கலாம் என்பதற்கு, ஜாபிதா தயாரிக்கவேண்டுமாம் சர்க்கார்! எப்படி இருக்கிறது மூளைபலம்!

ஜாபிதாவைத் தயாரித்துச் சர்க்கார், தனது சட்டத்தை, பலத்தை, போலீசை, ராணுவத்தை உதவிக்கு வைத்துக்கொண்டு, ஆங்காங்கே கள்ளத்தனமாக உள்ள நெல்லைக்கைப்பற்றி, மக்களுக்குவழங்குவதுமுறை—அதற்கே இவர்களை ஆளச்சொன்னது—இவர்கள் ஜாபிதா தயாரிப்பதாம், அதைப் பிரசுரிப்பதாம், அதைப்பார்த்துவிட்டு ஜனங்கள் எங்கெங்கு நெல்இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதாம், பிறகு ஜனங்கள் அதை எடுத்துக்கொள்வார்களாம்!! கொக்குத் தலையிலே வெண்ணெய் வைக்கிறார்! தும்பை விட்டு விட்டு, வாலைப் பிடித்து இழுக்கச் சொல்கிறார்!

ஜனங்கள், தினசரி ஆசிரியர் கூறுவதுபோல, சர்க்காரை ஏய்க்கும் பிரபுக்களிடமிருந்து நெல்லை எப்படி எடுப்பது என்பது தெரிந்து செய்கிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம் — அதற்கு ஜாபிதாகூடத் தேவையில்லை. பத்து இடம் தேடினால் இரண்டு இடத்தில் கிடைக்கிறது என்ற பழமொழிப்படியே மக்கள்நடந்துகொள்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம், அப்போது சட்டம்,ஒதுங்கிஇருக்கும்,போலீஸ், ராணுவம், இவை, மக்களின் முறை சரி என்று, விலகிநிற்கும், என்று, ஆசிரியர், உறுதி கூறுவாரா? சர்க்

கார், சுடச்சொல்லாது, அடிக்காது, சிறையில் தள்ளாது, என்று கூறுமா! கேட்பதே பைத்யக்காரத்தனம். அவ்விதமான நிலையிலே, சர்க்கார் சும்மா இருந்துவிடும் என்று உறுதி கூறுவதுபோல, ஊர்மக்கள், இன்று உணவுப் பஞ்சத்திலே இருப்பது போதாதென்று அவர்களைப், போலீசிடம் தடியடிபடவும், குண்டடிபடவுமான நிலைமைக்குச் செல்லும்படி, மறைமுகமாகக் கூறுகிறது ஏடு! இதுவா மக்களைக் காப்பாற்றும் முறை. ஒரு சர்க்கார், கள்ளமார்க்கட்டுக்காரர் யார் என்று தெரிந்தும், அவர்களைத்தண்டிக்கத்தைரியமின்றி இருப்பது-அவர்கள் யார் என்பதை மக்களிடம் கூறுவது-பிறகு மக்கள் அவர்கட்குத் தெரிந்த முறையில் நடந்து கொள்வது, என்றால், இதற்கு ஒரு சர்க்கார் ஏன்? மக்களை நெருப்பிலே குதிக்கச் சொல்வது நேர்மை அல்ல! தினசரி, தைரியமாகச் சர்க்காருக்குக்கூறட்டும், கள்ளமார்க்கட்டுக்காரர்களைப் பிடித்துத் தண்டித்தாகவேண்டும் என்று. ஜாபிதா தயாரித்துச் சர்க்காருக்குத்தரட்டும். அது வீரம். அது நேர்மை. தினசரி இதைச்செய்தால், மலபார் போலீஸ் வராது, பட்டாளம் வராது, தடுக்க. ஆனால் மக்கள் ஏதோ செய்யவேண்டுமென்று கூறுகிறதே அந்த நிலை ஏற்படுமானால், போலீசும் படையும் மட்டுமல்ல, தினசரியின் தலையங்கமே கூடவரும், அராஜகம் கூடாது—அக்ரமக்காரர்கள் அடக்கப்படவேண்டும்—என்றெல்லாம்.

ஊரார் வீட்டுக் குழந்தையை விட்டு ஆழம் பார்ப்பது என்பது போல, ஊர்மக்களை ஆபத்தான காரியத்திலே ஏவிவிட்டுப் பிறகு கள்ளமார்க்கட்டை ஒழிக்கக் கருதுவது பேதைமை மட்டுமல்ல, மக்களுக்குத் தெரியாமல் செய்யும் துரோகமுமாகும்.

மக்களின் பொதுநலனுக்குவிரோதமாக நடப்பவர்களின் ஜாபிதா தயாராகட்டும்-சர்க்காருக்கு, இவர்களைத் தண்டித்தாகவேண்டும் என்று 'தாக்கீது' தயாராகட்டும், பொதுமக்கள் சார்பிலே, சர்க்காரை இந்தக் காரியம் செய்யும்படி வற்புறுத்த, நிர்ப்பந்தப்படுத்த நாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு, உரிமை இருக்கிறது—வசதி இருக்கிறது—சக்தியும் இருக்கிறது-அதைச்செய்யத்தினசரி முன்வரட்டும் — மக்களைக்காப்பாற்றும் நோக்கம் இருந்தால்.

*

# பீகாரியின் போக்கு

இதென்ன சார், பைத்யக்காரத்தனமான பேச்சு? வடநாடு, தென்னாடு, என்று பேதம் பாராட்டுவதா? எல்லாம் ஒரே நாடுதானே! நமக்குள், யார், யாரை, ஆளுவது என்று பிரச்னை கிளப்புவதா!—

மேதைகளென்று தங்களைக் கருதிக் கொள்பவர்களின் வாதம் இது.

ஆனால், இந்த வாதம், எதுவரையில் நிலைக்குமென்றால், பிரச்னைக்கு வலிவு பிறக்கும் வரையில். பிறகோ, "சரி! உன் இஷ்டப்படியே நடக்கட்டும்." என்று கூறிவிடுவர். இது, பாகிஸ்தான், அமைப்பின்போது நன்கு விளங்கிவிட்டது.

பொதுமக்கள், இந்தப் போக்கைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை என்ற ஒரே தைரியத்தினால், இந்த 'மேதை'கள் 'பழையபல்லவியை' இன்று, திராவிட நாடு தனி நாடு ஆகவேண்டும் என்று நாம் கேட்பதற்கும் உபயோகிக்கிறார்கள். பாகிஸ்தான் சம்பந்தமாக, என்னென்ன வாதங்களை வீசினார்களோ, அதேபோல, இதற்கும் செய்கிறார்கள்.

நாமாவது, நாடு தன்னாட்சி பெறவேண்டும் என்று கூறுமளவு இருக்கிறோம். ஆனால், வேறு சிலரோ, 'துவேஷம்' காட்டும் அளவு சென்றிருக்கிறார்கள் — மாகாணப் பற்று காரணமாக.

மாகாணப்பற்று, மிகமிக வேகமாகவும், அதிகமாகவும் முதன்முதலாக பரவியது வங்காளத்தில். வங்காளம்வங்காளிகளுக்கே! வங்காளிகளே! வங்கப் பொருளையே வாங்குங்கள், என்ற 'சுலோகங்கள்', பத்தாண்டுகளுக்கு முன்பே கிளம்பின. மொழி, கலை, நாகரிகம், பொருளியல், போன்ற பல துறைகளிலும், வங்காளம், தனக்கென ஓர் பிரத்யேக இடம் தேவையென்று உரிமைகொண்டாடிற்று. இந்தத்துணைக் கண்டத்தின் பொதுப்பிரச்னையான, ஏகாதிபத்ய ஒழிப்பு விஷயம், பலமானதாகவே, வங்கத்தின் மாகாணப்பற்று, கொஞ்சம் தணிந்து இருக்கிறது, தணிந்து அடியோடு போய்விடவில்லை. வங்காளபாபு, இன்றும், வங்கம் வங்காளிக்கே என்ற சுலோகத்தை மறந்துவிடவில்லை.

இது ஒருபுறமிருக்க, பீகார் மாகாணம், வங்கத்தை ஒட்டியே இருந்தபோதிலும், அங்கு பீகாரிகள், தனி உணர்வும் அதற்கேற்ற உரிமை வேட்கையும் கொண்டே உள்ளனர். அவர்களுக்கு, வங்காளிகள் என்றால், வெறுப்பு. வங்காளிகள், பீகாரில் நுழைந்து ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று, பீகாரிகள் ஆத்திரப்படுகிறார்கள். பீகாரில், எந்தக் காரியத்துக்காக வந்திருந்த போதும், வங்காளி உலவுவது கண்டால், பீகாரிகளுக்குக், கோபம்பிறக்கிறது. ஒரு அன்னிய நாட்டவனைக் கண்டால், அவன் எதற்காக இங்கு உலவுகிறான், ஏதோ சூது செய்யக் காத்துக் கொண்டிருக்கிறான், அவனை இங்கு நடமாட விடுவது நமக்கு ஆபத்தாக முடியும் என்று எப்படிக் கருதுவரோ, அது போலவே, பீகாரி கருதுகிறான், தன் நாட்டிலே உலவும் வங்காளியைக்கண்டு. இதற்கென்று ஒரு பிரசாரமோ, இயக்கமோ, இல்லை; மக்களிடை இயற்கையாகவே இந்த உணர்ச்சி ஏற்படுகிறது. வெளிஇடத்தான் என்றாலே கசப்பு இயற்கையாக உண்டாகும். அதே வெளியிடத்தான், நம் இடத்திலே, செல்வத்துடன் வாழவும், உள்நாட்டான் ஏழ்மைக் கோலத்திலே இருக்கவும் கண்டால், வெறுப்புணர்ச்சி பலப்படத்தானே செய்யும். பீகாரியின், மனதிலே, இவ்விதமான வெறுப்புஇருக்கிறது, வங்காளியைப்பற்றி. பீகாரிலே, 'பாரதமாதா' வைப்பற்றிய பிரபந்தங்கள் பாடாமலில்லை, நாம் அனைவரும் ஒரு தேசமக்கள் என்று உபதேசிக்கப்படாமலில்லை. ஆனால் இவ்வளவையும் மீறி வெளிவருகிறது, நாம் பீகாரிகள், அவர்கள் வங்காளிகள், என்ற எண்ணம்.

இந்த எண்ணம், வெறும்வார்த்தை அளவிலே வரவில்லை—கத்தி, கட்டாரி, ஈட்டி, போன்ற ஆயுதஉருவிலே வெளிவந்தது ஆகஸ்ட்டு 18-ந் தேதி. அன்று, பீகாரில் வங்காளிகள் கூடினர், ஜம்ஷெட்பூரில். பீகார் பெங்கால் சங்கத்தின் ஆண்டுவிழாக் கூட்டம். இது தெரிந்த பீகாரிகள், பலவகை ஆயுதங்களை எடுத்துக் கொண்டு கிளம்பி, கூட்டத்திலே புகுந்து, வங்காளிகளைத் தாக்கி, பலரைக் காயமுறச் செய்தனர். ஏன் இந்தத் தாக்குதல்? என்று கேட்டதற்கு, வங்காளிகள், பீகாரில், எந்தக் காரணத்துக்காகவும் கூட்டம் நடத்துவதைப்பீகாரிகளான நாங்கள் அனுமதிக்க மாட்டோம் — என்று கூறிவிட்டனராம். அடிபட்ட வங்

(8-ம் பக்கம் பார்க்க)

4–ம் பக்கத் தொடர்ச்சி

என்று அல்லி வேஷக்காரன் பாடினான்—செல்லாயிக்குப் பாடல் தெரியும்—எப்படிப் பாட முடியும்—வெட்கமாக இருக்குமே!!

இந்தச் சமயத்திலே செல்லாயியைக் கண்டு, சுப்பன் பெருமைப்பட்டான். காட்டு மல்லிகை என் தங்கை—நாட்டுப்புறத்திலே இருக்கிறாள்—காசம் பிடித்ததும் கண் மங்கினதுகளும் பட்டணத்திலே 'டால்' அடிக்கின்றன, என்று எண்ணிப்பெருமைப்படுவான். இலேசாக வேலன் விஷயம் தெரிந்தது.

* * *

“செல்லா! நம்ம கொல்லைக் கோடியிலே இருக்கே ஒரு மரம், அது என்ன மரம்?” சுப்பு கேட்டான் ஓர் நாள்.

“அதுவாண்ணே. எனக்குத் தெரியாதே” செல்லா வழக்கத்துக்கு மாறாகப் புளுகு பேசினாள். புரியாதவன் போலச் சுப்பு நடித்தான். “என்னம்மா, தினம் போகிறே வருகிறே, மரம் இன்னதுன்னு கூடவா தெரியாது” என்று கேட்டான். “பிசினி மரம் அண்ணென்” என்று பதில் கூறிவிட்டு, உள்ளே ஓடிவிட்டாள். செங்கோடன் வயிறு குலுங்கக் குலுங்கச் சிரித்துக்கொண்டே, “பாருடாப்பா, சாமர்த்தியத்தை. பிசினி மரமாம். தாலி கழுத்திலே ஏறுவதுக்கு முன்னேயே, பேரைச் சொல்லக்கூடாதாம்! பிசினி மரம்! வேல மரம்னு சொன்னா, அவன் பேரு வருதுன்னு. என்ன யோசனை பாருடாப்பா” என்று கூறினான்.

போதையில்லாத நேரமாகப் பார்த்து, கோவிந்தனிடம் பேசினான் செங்கோடன். “தைமாசம் முடிச்சிடுவோம்” என்று கோவிந்தன் கூறிவிட்டான். வேலன், கவர்ச்சியான தோற்றமுடையவனாகவும், உயர்ந்த குணமுள்ளவனாகவும், நல்ல உழைப்பாளியாகவும் இருப்பதையும், அவனிடம் செல்லாயி உள்ளன்பு கொண்டிருப்பதையும் கண்டு, சுப்பு, இது பொருத்தமான காதல் கலியாணம் என்றுகூறி மகிழ்ந்தான். போட்டோ எடுத்துப்போடலாம் பத்திரிகையிலே! எத்தனையோ தேய்ந்துபோன திருமதிகளின் திருமண பிளாக்குகள் வெளி வருகின்றன! ஆனால்ஒரு உழவன் மகளின், உயர்ந்த அழகும் வேலனின் வீரத்தோற்றமும், பத்திரிகைக்காரருக்கு எப்படிப்பிடிக்கும்? பட்டிக்காட்டானுகபடந்தானே அது! மிராசுவீடா, இல்லெ, ஒரு டாக்டரா, படம்போட. ஆகவே சுப்பு அந்த ஆசையை அடக்கிக்கொண்டான். அவன் மனதில் தன் தங்கையும் வேலனும் சந்தோஷமாக இருக்கும் காட்சி, அப்படியே பதிந்து இருந்தது — போட்டோவை விடத் தெளிவாக.

இந்த நிலையிலே, “செல்லாயிக்கு உடம்பு சரியில்லை. பிசாசு பிடிச்சுக்கிட்டு இருக்கு. பயப்படவேணும். தக்கது செய்து வர்ரோம்” என்று கடிதம் வந்தால், சுப்பு திடுக்கிட்டுத் தேம்பி அழாமல் எப்படி இருக்க முடியும். லீவ் இல்லை, எனவே, விவரமாகக் கடிதம் எழுதினான் தகப்பனுருக்கு. “பேயும் கிடையாது, பூதமும் கிடையாது; நோய்தான் அது. நல்ல மருந்து கொடுக்கவேணும்—வீணா மந்திரம்னும் மாயம்னும் செய்து, செல்லா உடம்பைப் பாழ்படுத்தி விடாதிங்க. நான் ஒரு பத்து நாள்லே வர்ரேன்.” என்று. கொஞ்ச நாள், மகன் சொன்னபடித்தான் செங்கோடன், மந்திரக்காரனைக் கூப்பிடவே இல்லை. ஆனால், செல்லாயிக்கோ, உடம்பு இளைத்தது, ஒரே மயக்கம், தலைவிரிகோலமாகிக்கிடந்தாள்—கிணற்றிலே குட்டையிலே கூட விழுந்துவிடுவேன்னு சொல்கிற அளவுக்கு, பேய்முற்றிவிட்டது.

“செல்லா! உடம்பு என்னம்மா செய்யுது?” அம்மா கேட்பாள் அன்புடன். கண்களிலே மிரட்சியுடன் செல்லாயி மௌனமாக இருப்பாள். தாயு மேலும் மேலும் கேட்டால், செல்லாயியின் கண்களிலேநீர்பொலபொலவென்று உதிரும்.

சாப்பாடு சரியாகக் கிடையாது. அழுக்குப்புடவைதான் — துவைப்பது கிடையாது—சமயல் செய்கிற இடத்தருகேயோ, புறக்கடைநடைப் பக்கமோ, படுத்தபடி இருப்பாள். “எழுந்திரம்மா செல்லம்” உஹூம் —‘ஏம்மா!”—“மயக்கமா இருக்கு’ —இதேதான் பேச்சு. ‘மாமரத்துப் பிசாசு! வேறே ஒண்ணுமில்லே! இது நல்லாத் தெரியுது; நீ என்னப்பா செங்கோடா, நம்மபூசாரி பொன்னனைக்கூப்பிட்டனுப்பி, மந்திரம் செய்யச்சொல்லு; ஏன்முழிக்கறே” பலர் கூறினர் இதுபோல.

“என்மவன் சொல்றான், அதெல்லாம் வேணாம்னு” செங்கோடன் கூறுவான் அதற்குப்பதில். குடிவெறியிலே, கோவிந்தனும் ஒருநாள் கூச்சலிட்டான், மாமரத்துப் பிசாசு புடிச்சவளெ, என்மவன் தலையிலே கட்டலாம்னு நினைச்சயடா.....டேய் ..............” என்று.

செங்கோடன் கண் எதிரேயும் கருத்திலும், செல்லாயி தான் — வேலன் — கோவிந்தன் — திருமணப்பந்தல்— இவை எதுவும் தெரிவது கிடையாது. “குடிக்காரப்பய, ஏதோ கூவிகிட்டுக்கிடக்கட்டும்” என்று கூறிவிட்டான். எதற்கும் வேலனையாவது பட்டணத்துக்கு அனுப்பலாமா சுப்புவைப்பார்க்க என்று எண்ணினான். வேலன், ‘அப்பாவுக்கு உடம்பு ஒருவேளைப்போல இல்லெ—நான் எப்படிப்போவமுடியும்” என்று நிர்த்தாட்சணியமாகக் கூறிவிட்டான்.

“இவனைப்போய்த் தங்கமான பயல்னு நினைச்சிக்கிட்டு இருந்தேன். தறுதலைப்பயமவன், தாலிக்கயத்தைத் தூக்கிகிட்டுத் திரிஞ்சான்; இப்பஎன்னடான்னா தவப்பனுக்கு உடம்புசரியில்லேன்னு சொல்றான். கொடம் கொடமாக் குடிச்சுப்போட்டுக்கிடக்கிறான் அப்பன்காரன். இவரு உருகுறாரு. அந்த நாய்க சம்பந்தமே நமக்குக்கூடாது போ” என்று செங்கோடன் சலித்துக்கொண்டான்.

“போவுது, மெதுவாப்பேசுங்க. அது வேறே அவகாதிலே விழப்போவுது” என்று செங்கோடன் மனைவி, சிவப்பி, கூறினாள்.

கொஞ்சநாள் கழித்துத்தான்சுப்பு வந்தான்-நிலைமையைக் கண்டான்-அவனுக்குத் துக்கம் தாங்கமுடியவில்லை. அவன் கேள்விகளுக்கும், “ஒண்ணுமில்லே — மயக்கம்” இரண்டே வார்த்தைதான் பதில்.

“ஏம்பா, வேலனை...........என்று ஆரம்பித்தான் சுப்பு. அவரு ரொம்பப்பெரியவருடாப்பா. அப்பனை விட்டு அரைநொடி அப்படி இப்படி போகமாட்டாரு. எல்லாம், சுப்பு! மனுஷாளுங்க சுபாவம், இந்தமாதிரி நேரத்திலேதானே தெரியுது”என்று துவக்கி, வேலன் நடந்துகொண்ட போக்கைக்கூறினான் செங்கோடன். சுப்புவுக்கும்கோபந்தான். மடையன் முட்டாள்! காட்டுப்பூச்சி! என்று முணமுணத்தான். “ஏம்மா! பொழுது போக்கா படப்புஸ்தகத்தைப்பாரேன்” என்று சுப்பு தங்கைக்கு யோசனை கூறினான். செங்கோடன் புத்தகத்தைக் கொண்டு

வந்து சுப்புவிடம் காட்டி, "இதெக் கூடக்கிழிச்சிவிடுதேப்பா. இதெல்லாமா நோய்? மாமரத்துப்பேயின் வேலே தாம்பா" என்ருர்.

புத்தகத்தை வாங்கிப்புரட்டினுன் சுப்பு, இரண்டோர் ஏடுகள் கிழிந்து கிடந்தன—மோட்டார்—ஒரு அலங்காரபுருஷன் ஆகிய இரண்டு படங்கள் அவை.

* * *

அலங்கார புருஷனின் படம் அலங்கோலமாகக் கிடந்தது. அவன் யார்? கொஞ்சம் ஆராய்ச்சி நடத்தினுன். என்ன காரணத்தாலேயோ, செல்லாயி, அந்த ஆளிடமோ, அல்லது அதேபோன்ற உருவமமைந்தவனிடமோ, கோபம் கொண்டிருக்க வேண்டும். ஏன்? பட்டிக்காட்டிலே, இப்படிப்பட்டவன், ஏன் வரப்போகிருன்? வந்திருந்தாலும், செல்லாயிக்கு என்ன தொடர்பு இருக்கமுடியும்? யோசிக்க யோசிக்க அவனுக்குக் குழப்பம் அதிகரித்ததேயன்றி, விளக்கம் ஏற்படவில்லை. அவளோ, விறைக்கிருள்—விம்முகிருள்- விளக்கம் தருவதாக இல்லே. வேலனே, "யார் கண்டாங்கோ" என்றுசுருக்கமாகப்பேசிவிட்டான். சுப்புவோ இந்தச் சிக்கு அறுக்காமல் இருப்பதில்லே என்று முடிவு செய்து கொண்டான்.

படப்புத்தகம், அவன்தயாரித்தது தானே — 'உலகம்' ஏட்டிலிருந்து கத்தரித்து எடுத்த படங்களைக் கொண்டு. எனவேமோட்டாரும், சுந்தரப்புருஷனும், அவன் கத்தரித்த படங்கள்தான். யார் அவன்?யோசித்தான் நெடுநேரம், புரியவில்லை. ஆபிசுக்குச்சென்ருன். அங்கு கண்டுபிடித்தான் பழைய இதழ்களைப் புரட்டி — அவன் ஒரு சினிமா டைரக்டர்! சிங்--என்பது பெயர்.

கிராமக் காதல் என்ற உன்னதமான கதையை, டைரக்டர் படமாக்கிக்கொண்டிருக்கிருர் என்ற செய்தியும் இதழில் இருந்தது. ஒரு சமயம், டைரக்டர் கிராமக் காட்சியைப்படமெடுக்கப் போயிருந்தாரோ? அப்போது ஒருவேளை, செல்லாயி அவனைக்கண்டிருக்க முடியுமோ — என்னமோ! டைரக்டரைச் சந்தித்துக் கேட்டாலொழியச் சிக்கல் தீராது என்று ஏற்பட்டது. பார்சல் கட்டும் 'பயலே' பிரபல டைரக்டர் சந்திப்பது, எப்படி? எப்படியாவது சந்தித்தாக வேண்டுமே! பலவிதமான முயற்சிகள் எடுத்தபடி இருந்தான். ஒருநாள், டைரக்டரே, ஆபீசுக்கு வந்தார்—எடிட்டரைப் பார்க்க!

சார்! கிராமக்காதல், 'ரஷ்' போட்டுக்காட்டுகிறேன் வருகிறீரா?"— என்று கேட்டார் டைரக்டர்.

உள்ளமோ ரஷ்யாவின் போக்கை ஆதரிக்கச் சொல்கிறது, பத்திரிகை முதலாளியோ அமெரிக்கக் கம்பெனிக்கு ஏஜண்டு, ஆகவேஅவரோ அணுகுண்டு அன்பு மார்க்கத்தின் தூதுவனுக அமையும்படிஅமெரிக்கா அபூர்வமாக வேலே செய்கிறதுஎன்று பிரசாரம் செய்யச்சொல்கிருர், இந்நிலையிலே என்ன செய்வது என்று குழம்பிக் கிடந்தவருக்கு, படம், பார்க்க அழைப்புக் கிடைத்தது, எதிர்பாரா விருந்தாயிற்று.

என்ன காரணத்தாலோ, சுப்புவையும் அழைத்துச் சென்ருர் எடிடர்.

அங்கு சென்றபிறகுதான் சுப்பு உண்மையைத்தெரிந்துகொண்டான்.

எடிடர் மிக மிகப் பாராட்டிய ஓர் காட்சி, சுப்புவைத் தூக்கிவாரிப் போட்டது.

எருமை ஒன்று, வழக்கத்துக்கு மாருக ஓடிவந்தது—அதன் பின்னே ஓடிவருகிருள், ஒருபெண் — வேறு யாருமில்லே—செல்லாயிதான்! செல்லாயியின் கழுத்திலே ஒருரோஜா மாலே!!

கொஞ்சம் தொலேவிலே ஓர் ஆலமரம். அதன் அடியிலே, வேலன், அண்ணுந்து பார்த்தபடி படுத்துக் கொண்டிருக்கிறுன்—நாகரிக உடை அணிந்த ஒரு மாது, ஒரு திராட்சைப்பழக் கொத்தை அவனுடைய வாய்க்கு நேராகப் பிடித்துக் கொண்டிருக்கிருள்!

இந்த இரு காட்சிகள் போதாதென்று, சுப்புவே பதைக்கும்படியான வேருேர் காட்சியும் காட்டப்பட்டது.

செல்லாயி, ஒரு ஆப்பிளைக்கடித்துக் கொஞ்சம் தின்கிருள். அதன் இனிப்பிலே இலயிக்கிருள் போலும்! அதனுலேதான், முகம் அவ்வளவு 'களை'யாக இருக்கிறது என்று, அவன் முதலில் எண்ணிக்கொண்டான். ஆனல் காட்சியின் அடுத்த கட்டம் அவனைத் தூக்கி வாரிப் போட்டது. கடித்த ஆப்பிளை செல்லாயி, ஒரு ஆடவனிடம், (நாகரிக உடைக்காரன்) தருகிருள். அவன் சந்தோஷமாக அதை வாங்கிக் கடித்துத் தின்கிருன்-மீண்டும் அவளிடம் தருகிருன்-மீண்டும் அவள், ஆப்பிளில் கொஞ்சம் கடித்துத்தின்கிருள்—மீண்டும் அவனிடம் தருகிருள்—மறுபடியும் அவன் அதைத் தின்கிருன். சுப்புவுக்கு வந்த கோபம் இவ்வளவு அவ்வளவு இல்லே.

காட்சி மாறிற்று — வேலனும்—செல்லாயியும், ஆத்திரத்துடன் சண்டை போடுகிருர்கள்-செல்லாயியின் தலே மயிரைப் பிடித்திழுத்து வேலன் துன்புறுத்துகிருன். செல்லாயி, அவனுடைய கையைக்கடித்து விடுகிருள். அவன், செல்லாயியை, ஒரு மரத்தின் மீது மோதும்படி. தள்ளுகிருன். இப்படிச் சண்டை நடக்கிறது.

எடிடர், படம் முதல் தரம் என்ருர்.

டைரக்டர், படத்தின் முக்கிய பகுதிகளல்ல இவை. கிராமீயக் காட்சிகள் சில இவை. படம் பூராவும் தயாராளுல், பட உலகத்துக்கே பெருமை தரும் என்று கூறினர்.

இந்தக் காட்சியிலே வரும் காதல் கட்டம், சண்டை, இவைகள் கதையிலே சம்பந்தப்பட்டவைகளல்லவா என்ருர் எடிடர்.

சம்பந்தப்படுத்த வேண்டும்—என்ருர் டைரக்டர். ஆனல், இந்தக் காட்சிகள், என் சாமர்த்தியத்தின் பரிசு! கூறுகிறேன் கேளும், இந்தக் காட்சிகளை நான் எப்படிச் சிருஷ்டித்தேன் என்பதை என்ற பீடிகையுடன், டைரக்டர், தன் திறமையை விளக்கலானர்.

கிராமக் காட்சியைப் படம் பிடிக்க, ஒரூர் என்ற கிராமம் சென்றேன் — கதாநாயகி ஒய்யாரியும், கதாநாயகன் ஓங்காரமும் வந்திருந்தனர். எடிடர் சார்! உங்கள் மனதோடு வைத்துக் கொள்ளுங்கள், ஒய்யாரியின் உண்மைப் பெயர் குப்பி! சிங்காரம் என்பவனைத்தான் ஓங்காரம் என்று புதுப் பெயரிட்டேன்.

கிராமம் அழகாக இருந்தது. கதாநாயகனிடம் கோபித்துக் கொண்டு கதாநாயகி ஊடல் செய்வதாகக் கதை.

இதற்காக, கதாநாயகிக்கு ஒரு கிராமத்தானிடம் காதல் ஏற்பட்டதாக ஒரு கற்பனை செய்தேன்—கதாசிரியருக்கு நான் கூறினபிறகு தான் விஷயம் தெரியும்.

(16-ம் பக்கம் பார்க்க)

# இப்படியெல்லாம் நடந்தது

பெண்களுக்கு ஓட்டுரிமை கிடைக்கவேண்டும் என்று பிரிட்டனில் 1850ல் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

* * *

1851ல், ஒருபெண்கூடப்போட்டோ எடுக்குந்தொழிலில் ஈடுபட்டு இல்லை-1861ல், 130 பெண்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டனர்.

* * *

அடிமை முறையை எதிர்த்து ஒரு கூட்டம் லண்டனில் 1840ல், நடைபெற்றது. அடிமை முறை கூடாதென்பதற்காகப் பிரசாரம் செய்ய, சில அமெரிக்க மாதர்கள் வந்தனர். அடுப்பூதும் பெண்களுக்கு மேடை ஒரு கேடா! என்று கண்டித்தனர் அவர்களை லண்டன் ஆடவர்கள், கூட்டத்தில் பேச அனுமதிக்கவில்லை.

* * *

பெண்களுக்கு ஓட்டுரிமை தரப்படவேண்டும் என்பதற்கான முதல் மசோதா தயாரிக்கப் பட்ட போது, அதை ஆதரித்து மகஜரில் 134000 மாதர்கள் கையொப்ப மிட்டனர்.

பார்லி மெண்டில், மசோதாவை ஆதரித்து 94பேரும் எதிர்த்து 220 பேரும் ஓட் அளிக்கவே, மசோதா தோற்றது. 1875 லிருந்து 1879 வரை, வருஷந்தோறும், மேற்படி மசோதா கொண்டுவரப்பட்ட வண்ணமும், தோற்ற வண்ணமும் இருந்தது. 100 ஓட்டுகளுக்கு மேல்கிடைக்கவே இல்லை மசோதாவுக்கு.

1879 ல்
ஆதரவாளர் 103.
எதிர்ப்பாளர் 217.
1883 ல்
ஆதரவாளர் 114.
எதிர்ப்பாளர் 130.
1892 ல்
ஆதரவாளர் 152.
எதிர்ப்பாளர் 179.

1895ல் ஆதரவாளர் 232 ஆயினர்.

1900ல் 274 பேர் ஆதரவு தந்தனர், கடைசியில் 420 பேரின் ஆதரவு பெற்று மசோதா நிறைவேறிற்று. 179 அதிக ஓட்டுகள்!!

மாதருக்கு ஓட்டுரிமை அளிக்க வேண்டுமென்ற கிளர்ச்சிக்கு ஆதரவு காட்ட, ஹைட் பார்க்கில் நடைபெற்ற கூட்டத்திலே5இலட்சம்பேர் கூடினர்.

* * *

நியூஜிலந்தில் 1878 ல் பெண்களுக்குஓட்டுரிமை தரப்படவேண்டும் என்று துவக்கப்பட்ட முயற்சி தோற்றுவிட்டது. 1886ல் பெண்கள் கிளர்ச்சியைத் துவக்கினர். 1891ல், நியூஜிலந்து சட்டசபையில் 32பேர் ஆதரித்தனர். 7பேர் எதிர்த்தனர். மசோதா வெற்றி பெற்றது. ஆனால் மேல்சபையிலே இரண்டு அதிக ஓட்டுகளால், மசோதாவைப் பெண்ணடிமைப்போக்கினர் தோற்கடித்தனர். விடவில்லை பெண்கள். 1893 ல், இருசட்ட சபைகளிலும் மசோதா நிறைவேறிற்று, அடுத்த தேர்தலின் போதே 90,000 பெண்கள் ஓட்டுரிமை பெற்று தேர்தலில் கலந்துகொண்டனர்.

தென் ஆஸ்திரேலியாவில், மாதர்கள் கேட்கக்கூட இல்லை, 1885ல், அவர்களுக்கு ஓட்டுரிமை அளிக்க சட்டசபை தீர்மானித்தது. மெஜாரடி கிடைத்தது,ஆனால் இதற்குமுன்றில் இரண்டுபாகமெஜாரடி தேவைப் பட்டதால் பெண்கள் கிளர்ச்சியைத் துவக்கி 1894 ல், மசோதா வெற்றியுறும்படி செய்தனர்

நியூசவுத் வேல்சில் 1890ல் மசோதா கொண்டு வரப்பட்டு, சட்டசபையில் நிறை வேற்றப்பட்டது.

ஆதரவாளர் 51.
எதிர்ப்பாளர் 7.
ஆனால் மேல் சபையில்
ஆதரவாளர் 21.
எதிர்ப்பாளர் 26.

இருக்கவே, மசோதா சட்டமாகவில்லை. நாட்டிலே பிரசாரத்தைத் துவக்கி, அடுத்த வருஷமே, மாதர்கள் வெற்றி பெற்றனர்.

மேற்கு ஆஸ்திரேலியாவில், குறிப்பிடத்தக்க எதிர்ப்பேஇல்லை, 1899ல் சட்டம் பிறந்துவிட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டிலே கூட, பரிதாபகரமான நிலைமைதான் பிரிட்டனில். இப்போது கேட்பதற்குக்கூடப்பிடிக்காது; நம்பவும்மாட்டார்கள். பிரபல வழக்கறிஞர் சர். எட்வர்டுசோக், வழக்குகளிலே, பெண்கள் தரும் சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடாதது என்று வாதாடினார்! குழந்தைகள், பித்தர்கள், முட்டாள்கள், ஆகியோர், இயற்கையாகவே சிந்தனா சக்தியும் தெளிவும் பெறமுடியாதல்லவா! ஆகவே அவர்கள், நீதிமன்றங்களில், சாட்சியம் கூறஎப்படி அருகதை பெறமுடியும்? அக்ரமம் இது அல்ல. இந்த மூன்று ரகத்தாருடன் பெண்களையும் சேர்த்தே, பிரபல நீதிநூல் கர்த்தாக்கள் எழுதிவைத்தனர்! வழக்கு மன்றங்களிலே யூதன், அடிமை, பெண்கள் மூவருக்கும், மரியாதை கிடையாது. சிவிட்ஜர்லந்துவழக்கு மன்றத்திலே ஒருவிசித்திரவழக்கம்-இரண்டு பெண்களின் சாட்சியம் ஒரு ஆணின் சாட்சியத் துகளுக்குச்சமம், என்பது சட்டம்! ஆணில் பாதிபெண்! ரோம்சாம்ராஜ்யத்தில் கி. மு. 215ல் ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பெண்கள் பொன் ஆபரணம் போட்டுக்கொள்ளக்கூடாது, கண்கவரும் ஆடை அணியக்கூடாது, ரதத்தில் ஏறிச் செல்லக்கூடாது என்பது சட்டம்.

* * *

பிப்ரவரி 4ந்தேதி அமெரிக்காவில் நாஸா என்னுமிடத்தில் இறந்த நேபாள இளவரசர், மேஜர்ஜெனரல் விஷ்ணு சப்ஷேர்ஜங்ராணாவை, விமானமூலம் காசிகங்காநதி தீரத்தில் சரண பாதுகா என்னும் இடத்துக்குக்கொண்டுவந்து, தகனம்செய்தனர். தகனச் சடங்குக்குச் சுமார் 1 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாகச் செலவிடப்பட்டதாம்.

* * *

நகைச்சுவை எழுத்தாளர் மார்க்ட்வெயின் ஒருமுறை பத்திரிகை நடத்தினர். ஒருசந்தாதாரிடமிருந்து கடிதமொன்று வந்தது, மார்க்ட்வெயினுக்கு.

ஆசிரியரே!

உமது பத்திரிகையைப்பிரித்தேன். அதிலே ஒரு சிலந்திப்பூச்சி இருந்தது. இது கெட்டதா, நல்லது தருமா என்று தெரிவிக்கவும்

மார்க்ட்வெயின் பதில் எழுதினர்.

சந்தாதாரரே!

சிலந்திப்பூச்சி பத்திரிகையில் காணப்பட்டது நல்ல சகுனமுமல்ல, கெட்டதுமல்ல, பத்திரிகையிலே எந்தக் கம்பெனி, விளம்பரம் செய்யவில்லை என்பதைத் தேடிக்கண்டு பிடிக்கவே சிலந்தி பத்திரிகையில் நுழைந்தது. விளம்பரம் செய்யாத கம்பெனியின் வாயற்படியிலே 'கூடு' கட்டிக்கொண்டு வாழலாம் என்பது சிலந்தியின் எண்ணம்.

மார்க்ட்வெயின்.

14-ம் பக்கத் தொடர்ச்சி

கிராமத்தான் ஒருவனைக் கண்டேன் — ஒரு வாரம் என்னிடம் வேலைக்கு அமர்த்திக்கொண்டேன். ஒய்யாரியும், ஒரு பெண்ணை வேலைக்கு அமர்த்திக்கொண்டாள். அந்த இருவருந்தான் இவ்வளவு பிரமாதமாக நடித்திருக்கிறார்கள் — ஆனால் அவர்களுக்குத் தெரியாது நடித்ததாக! எல்லாம் டிரிக்ஷாட்.

மரத்தடியிலே அவனைப் படுக்கச் செய்து, படம் பிடித்தேன் முதலில்.

பிறகு, ஒய்யாரி கையிலே திராட்சையைக்கொடுத்து, அதை அவள், யாருக்கோ தருகிற பாவனையுடன் ஒரு படம் பிடித்தேன். இரண்டையும் இணைத்த உடன், கதை உருவாயிற்று! கட்டழகு வாய்ந்த ஒரு கிராமத்தானிடம், மையல் கொண்ட நாகரிக நங்கை, அவனுக்குத் தன் இருதயத்தைக் காணிக்கையாக்கி, அவனுடன் காதல் விளையாட்டு நடத்துகிறாள் — திராட்சை தருகிறாள்—என்று கதை வளர்ந்தது.

கிராமப் பெண்ணிடம் ஒரு ஆப்பிள் கொடுத்து, விட்டு விட்டு கடிக்கச் சொல்லிக் காட்சிகள் எடுத்தேன். நம்ம கதாநாயகனிடம் வேறோர் ஆப்பிள் கொடுத்து, அதேபோலச் செய்யச் சொல்லிப் படம் பிடித்தேன், இரண்டையும் பக்குவமாக ஒட்டினேன்—அதன் விளைவுதான்—கிராமப் பெண் நாகரிக புருஷனுடன் நடத்தும் 'பழக்கடி' விளையாட்டு.

இது மட்டுமா? இந்த இரண்டு காட்சிகளையும் அவசர அவசரமாகச் சரிசெய்து, பெண்ணுக்கு அவன் சம்பந்தப்பட்ட காட்சியும், அவனுக்கு அவள் சம்பந்தப்பட்ட காட்சியும், போட்டுக் காட்டினேன். அதன் விளைவுதான், அந்த அற்புதமான சண்டை!

ஓங்கி அறைந்தான் சுப்பு, டைரக்டரை! அடுத்த விநாடி அவர் காலைப் பிடித்துக்கொண்டான். பயந்துவிட்டார் டைரக்டர். பிறகு பரிதாபப்பட்டார், செல்லாயி—வேலன் விஷயத்தைச்சுப்புவிளக்கியதும்.

மோட்டார்கிளம்பிற்று ஊருக்கு. வேலனைத் தேடிப் பிடித்து; டைரக்டர் விஷயத்தை விளக்கினார்.

“அப்படிங்களா? ஐயையோ! நான், என் பத்தரை மாத்துத் தங்கத்தைச் சந்தேகித்துப் பதைக்கப் பதைக்கப் பேசிவிட்டேனுங்களே” என்று குளறினான் வேலன்.

செல்லாயிக்கும் விஷயம்விளக்கப்பட்டது, அவளும் வேலனை வீணாகச் சந்தேகித்ததற்காக வருந்தினாள். இருவருக்கும் இடையே, ஒரு டைரக்டரின் 'வேலை' மூட்டிவிட்ட சந்தேகம், நாளாவட்டத்திலே 'பிசாசு' ஆயிற்று, என்பதை வேலனும், சுப்புவும் புரிந்துகொண்டனர் —ஆனால் செங்கோடனுக்கு முடியாதல்லவா? அவன், பூசாரி பொன்னனைவேண்டிக்கொண்டான்— அவன் தன்வழக்கமான வேப்பிலை வீச்சை நடத்தினான் — இதற்குள் உண்மை விளங்கி, சந்தேகம் நீங்கிவிட்டதால், செல்லாயிக்குஇருந்துவந்தசஞ்சலம், அதன் விளைவாக ஏற்பட்ட மனக்குழப்பம், மயக்கம், ஏக்கம், திகில், யாவும் மறைந்துவிடவே அவள், “பழையபடி” சிரிப்புக்காரியானாள். செங்கோடன், பூசாரி பொன்னனுடைய மந்திரபலத்தாலே, தன் பெண்ணைப் பிடித்துக்கொண்டிருந்த மாமரத்துப் பிசாசு விலகிவிட்டது என்றே நம்பினான்—அதையே கிராமம்பூராவும் கூறினான். அவன் அறிவானா பாவம், இவ்வளவு அலைச்சலும், ஆலமரத்து பிசாசின் வேலை என்பதை!

✻

## ஆடைக்கு மனு

உணவுப் பொருள் சம்பந்தமாக, சென்னை மாகாணத்தை, மத்ய சர்க்காரும், வடநாட்டுத் தலைவர்களும் எந்த முறையிலே நடத்துகிறார்கள் என்பதைச் சென்ற கிழமை குறிப்பிட்டிருந்தோம்.

உடை சம்பந்தமாக உள்ள பிரச்னையிலும், இதே முறைதான் கையாளப்படுகிறது.

ஆளுக்குப் பத்து கெஜம் துணி தருவது என்று சர்க்கார் அளவு குறித்திருப்பதில், பம்பாய் மாகாணவாசிகளுக்கு, எட்டு கெஜம் மில் துணியும், இரண்டு கெஜம் மற்ற வகைத் துணியும் கிடைக்கிறது. ஆனால் சென்னையிலேயோ ஐந்து கெஜம் மில் துணியே கிடைக்கிறது.

இந்தப் போக்கு மாற்றப்பட வேண்டும், சென்னை மாகாணத்துக்கு, மாற்றாந்தாய்க் கொடுமை காட்டப்படுகிறது, நீக்கப்படவேண்டும்என்று சென்னைசர்க்கார், மத்திய சர்க்காருக்கு, மனுச் செய்துகொண்டிருக்கிறது.

இந்த 'மனு'ச் செய்துகொள்ளும், வேலை, சென்னை சர்க்காருக்கு, நிரந்தர நோயாக மாறும் வகையிலேதான், புதிய அரசியல் திட்டம் தயாராகிறது. —


# முத்தமிழ் நிலையம்

## புதிய வெளியீடுகள்

| | ரூ. | அ. |
| --- | --- | --- |
| 1. தமிழர் யார்? | 0 | 8 |
| 2. ஆரியர்—தமிழர் கலப்பு | 0 | 8 |
| 3. தமிழ்: பழமையும் புதுமையும் | 0 | 8 |
| 4. தமிழர் சமயம் எது? | 0 | 8 |
| 5. மரணத்தின் பின்? | 0 | 8 |
| 6. பெண்ணே பெரியவள், ஏன்? | 0 | 8 |
| 7. சிநதுவெளித் தமிழர் | 0 | 8 |
| 8. ஆரிய வேதங்கள் | 0 | 10 |
| 9. பாம்பு வணக்கம் (ஆராய்ச்சி) | 0 | 4 |
| 10. தமிழ் ஆராய்ச்சி | 0 | 6 |
| 11. திருக்குறள்: தெய்வக் கொள்கை | 0 | 4 |
| 12. சமணமும் சைவமும் | 0 | 8 |
| 13. உலகக்கலை உயர்வுக்கு உதவியவர் யார்? | 0 | 8 |
| 14. இராவணன் வித்தியாதரனா? | 0 | 8 |
| 15. ஏ, தாழ்ந்த தமிழகமே (C. N. அண்ணாத்துரை, M. A.,) | 0 | 6 |
| 16. பெண்கள் உலகம் | 0 | 14 |
| 17. நடன சுந்தரி (திரை ஒலி ஆசிரியர்) | 1 | 0 |
| 18. குமுதம் | 1 | 0 |
| 19. நாடகக்கலை மலர் (226 பக்கம்) | 2 | 0 |
| 20. தமிழர் சரித்திரம் | 3 | 0 |
| 21. இராவண காவியம் | 6 | 0 |
| 22. ஆயிரம் வினாக்களும் விடைகளும் | 1 | 0 |
| 23. இந்து மதம் தமிழர் மதமா? | அச்சில் | |
| 24. ஞானப்பால் (ஈழத்தடிகள்) | அச்சில் | |

முத்தமிழ் நிலையம்,
75, வரதாமுத்தியப்பன்தெரு, சென்னை.


Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press, 817—819 Hodgsonpet Conjeeveram.